# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,838 — 1969 ජනවාරි 24 වැනි සිකුරාදා — 1969.1.24**

14,838 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு சனவரி மாதம் 24 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 63 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் . | 85 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 81 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. | 82 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | 84 | ஏல விற்பனைகள் .. .. . | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 85 | நானாவித அறிவித்தல்கள் | — |


### பதவிகள்—வெற்றிடம்

**"இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"**

*1. படிகள்.—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. கேள்விக்குரிய நிபந்தனைகள்.—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.*

*3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

*(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படி செய்ய வேண்டும்.*

*(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்திய பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம், எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.*

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்*

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்
அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 20 ந் வ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகன்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள் ; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.

6. யுத்தச்சேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தைத் தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) நிரந்தரப் பதவியுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும், தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாகப் பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

இல.ஏ/89/எக்ஸ்/2029 68.

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### மகா வித்தியாலயங்களிலுள்ள I ந் தர விசேட பதவிகள்

1968 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6 ஆந் திகதிய 14,831 ஆம் இலக்க அரசினர் வர்த்தமானியில் I ஆம் பகுதி II ஆம் பிரிவில் என்னால் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்துக்கு உங்கள் கவனம் கோரப்படுகிறது. குறித்த வர்த்தமானி அறிவித்தலில் "மத்திய மகா வித்தியாலயங்களும்" மகா வித்தியாலயங்களும்" எனக் காணப்படும் சகல இடங்களிலும் "மத்திய மகா வித்தியாலயங்களும்" என்ற சொற்களை நீக்கிவிட்டு மகா வித்தியாலயங்கள் எனக் கொள்க.

இப்பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது :—

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள் : 7-2-69 அன்று அல்லது அதற்கு முன்னர்.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 14-2-69 அன்று அல்லது அதற்கு முன்னர்.

1968 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆந் திகதியதும் மேற்குறித்த அரசினர் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான எனது அறிவித்தலுக்கிணங்க விண்ணப்பித்தவர்கள் திரும்பவும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

டி. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 16-1-1969.

1-978/1—24.1.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,838

No. AB. *99/X. 2049/68*

## விலைமதிப்புத் திணைக்களம்

### உதவி விலைமதிப்பாளர் பதவி

விலைமதிப்புத் திணைக்களத்திலுள்ள உதவி விலைமதிப்பாளர் பதவி ஒன்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்றுப் பின்வரும் திகதிகளில் அல்லது

(ஆ) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் இரண்டு உத்தரவாதிகளால் உறுதி செய்யப்பட்ட உத்தரவாத ஒப்பந்தம் ஒன்றினால் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ள வேண்டும்.

(1) உண்மையுடனும் ஊக்கத்துடனும் தொடர்ந்து குறிக்கப்பட்ட பயிற்சியை திருப்திகரமாக முடித்து அந்தப் பயிற்சி முடிந்ததும் இலங்கை அரசாங்கத்துக்குச் சேவை செய்ய,

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும் பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு :—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழில் நுட்பத்தகைமையும், உயர் தொழிற்றகைமை அல்லது தொழில் நுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களத்தில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக் கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக் கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும், அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக் குழுவின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ('ஆ' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு என் முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்தி லுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக் கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங் களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ('அ' எனக் குறியிடப்பட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத் தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுக செயலகம்,
கொழும்பு 1, 16-1-69.

1–978/2—24.1.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,838

---

இல. AB 74/X2050/68.

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### இரசாயன விரிவுரையாளர் I ந் தர பதவிகள் அல்லது இப்பதவிகளுக்கும் பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தல்

இலங்கைத் தொழில்நுட்பவியல் கல்லூரியிலும் ஏனைய தொழில்நுட்ப நிலையங்களிலுமுள்ள இரசாயன விரிவுரையாளர் I ந் தர பதவிகளுக்கு அல்லது இப்பதவிகளுக்குப் பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 7.2.1969.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 14.2.1969.

குறிப்புகள்.—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வர விரும்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினுல் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலம் உடையவர்களாக விருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட, மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—இப் பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். தெரிவுசெய்யப்படுபவர் கைம்பெண் அநாதை இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு கட்டணம் செலுத்த வேண்டும். நியமதாரி முதற்கண் 3 வருட காலத்திற்கு தகுதி காண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. சம்பளமும் ஏனைய படிகளும்.—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :

ரூ. 8,880—480—13,200—வருடாந்தம்.

ரூ. 11,280/- இல் இரண்டு வருடங்கள் தங்கல் ; ரூ. 11,760/- பெறுமுன் திறமைக் கடப்புப்படி உண்டு.

4. தேவைப்படும் தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்கு திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1969.2.7 ந் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) (i) இரசாயனத்தை விசேட பாடமாகக் கொண்டு, அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் 1 ம் அல்லது 2 ம் வகுப்புச் சிறப்புப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(ii) இரசாயனத்தில் விஞ்ஞான முதுமானி அல்லது கலாநிதிப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(iii) ஆசிரியர் கலாசாலை அல்லது சிரேட்ட தொழில்நுட்ப நிலையம் அல்லது இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி போன்ற அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஒன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சமமான அல்லது உயர்ந்த நிலையம் ஒன்றில் 5 வருட படிப்பித்தல் அல்லது செயல்முறை அனுபவம் அல்லது 5 வருட படிப்பித்தல் அனுபவமும் செயல்முறை அனுபவமும் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) சிங்களத்தில் படிப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும். அல்லது நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங்களத்தில் தேர்ச்சிபெற வேண்டும்.

5. பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தல் தொடர்பில் அமையும் விதிகளும் நிபந்தனைகளும்.—(i) மேற்படி 4 ம் பந்தியில் கொடுக்கப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் எவர்களிடமிருந்தாவது விண்ணப்பங்கள் வாராவிடின், இப்பதவிக்குத் தகுதியான விண்ணப்பதாரின் எவராவது இல்லாவிடின், பயிற்சியாளராக நியமனம் பெறுவதற்கு பின்னரும் தகைமைகளையுடையவரிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படும் :—

(அ) வயது : 1969.2.7 அன்று 28 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (வயதெல்லை சகலருக்கும் ஏற்புடையதாகும்).

(ஆ) (i) இரசாயனத்தை விசேட பாடமாகக் கொண்டு, அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் 1 ம் அல்லது 2 ம் வகுப்புச் சிறப்புப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(ii) ஆசிரியர் கலாசாலை அல்லது சிரேட்ட தொழில்நுட்ப நிலையம் அல்லது இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி போன்ற அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஒன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சமமான அல்லது உயர்ந்த நிலையம் ஒன்றில் 5 வருட படிப்பித்தல் அல்லது செயல்முறை அனுபவம் அல்லது 5 வருட படிப்பித்தல் அனுபவமும் செயல்முறை அனுபவமும் பெற்றிருக்க வேண்டும்.

(இ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ii) தெரிவுசெய்யப்படுபவர் வெளி தேசத்தில் பயிற்சி பெறும்படி வேண்டப்படலாம். பயிற்சிக் காலத்தில் தகுதியான சகாயப் பணமளிக்கப்படும்.

(iii) தெரிவுசெய்யப்பட்டவர் வெளி தேசத்தில் பயிற்சி பெற நேரிடின், அவர் இலங்கை அரசாங்கத்துடன் ஓர் உடன் படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

செய்வதாக உறுதிப்படுத்தும் பிறவற்றுள், குறித்த பயிற்சியை நம்பிக்கையுடனும் கெட்டித்தனமாகவும் செய்து, திருப்திகரமாகப் பயிற்சியை முடித்து, அதன் பின்னர் இலங்கை அரசாங்கம் விரும்பின் (அரசாங்கம் தீர்மானிக்கும்) குறித்த ஒரு காலத்துக்கு அதன் சேவையிலீடுபடுவதாகவும்,

உடன்படிக்கையின் விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக நடக்கத்தவறின் இலங்கை அரசாங்கத்துக்கு, இப்பயிற்சி முழுவதற்குமாக இலங்கை அரசாங்கத்தால் அல்லது புலமைப் பரிசில் வழங்கும் ஸ்தாபனத்தினால் அல்லது இரண்டினாலும் செலவழிக்கப்பட்ட சகல செலவினங்களையும் (உதாரணமாகச் சம்பளம், சகாயப்பணங்கள், பிரயாணச் செலவு, பிற செலவுகள் ஆதியன) திருப்பிக் கொடுப்பதாக உறுதிப்படுத்துவதாகவும் உடன்படிக்கை செய்தல் வேண்டும்.

(iv) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் இரசாயனத்தில் விஞ்ஞான முதுமானி அல்லது கலாநிதிப் பட்டம் பெற வேண்டும்.

6. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

குறிப்பு.—(i) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக் கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

7. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும்; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

8. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

10. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 500, காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 16.1.1969.

1–978/3—24.1.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,838

---

இலக்கம் : AA 103/X 2051/1968.

## இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி

### இளமை உதவி கோட்ட ஏற்றியிறக்கற் கண்காணிப்பாளர் பதவிகள்

பொறிமுறைப் பகுதியில் பயிற்சிக்கு இளமை உதவி கோட்ட ஏற்றியிறக்கற் கண்காணிப்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிடப்பட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, த. பெ. இலக்கம் 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 7.2.1969.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 14.2.1969.

குறிப்பு :—

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததும் ஆன ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்போர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகி விட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிடப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றார்களா வென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்கு பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :—

(i) நியமனத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் 5 வருடங்களிற்கு தகுதிகாண் நிலையிலிருந்து பயிற்சி பெற வேண்டும். அவர்கள் இந்தக் காலத்தில் அரசாங்க சேவை சகாய நிதிக்கு கொடுக்க வேண்டப்படக்கூடும்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தகுதியான உடல் நலமுடையவரென்பதற்கு (கண் பரீட்சை உட்பட) மருத்துவ சோதனையில் நியமனத்திற்கு முன் சித்தி அடைய வேண்டும். அவர்கள் ஐந்து வருடங்களிற்கு பயிற்சியை நம்பிக்கையுடனும், ஊக்கத்துடனும் புரிவார்களென்றும், பயிற்சி சித்தியுடன் முடிந்தவுடன் 15 வருடங்களுக்கு அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவார்களென்றும் . ஒப்பந்தத்திலும் முறியிலும் கையெழுத்திட வேண்டும். முறியின் தொகை ரூபா 30,000/-.

(ii) பயிற்சியின் விபரம் பின்வருமாறு :—

(அ) 36 மாதங்களுக்கு—புகையிரதப் பகுதி இரத்மலானை வேலைக்களத்தில் தொழில் செய்ய வேண்டும். இவைகளில் 2 மாதங்கள் வரைவு அலுவலகத்திலும், 1 மாதம் தொழில் நுட்ப அலுவலகத்திலும், ½ மாதம் கணக்கு அலுவலகத்திலும் வேலை பார்க்க வேண்டும்.

(ஆ) (i) 7 மாதங்கள் தெமற்றக்கொடை நீராவி கொட்டில்களிலும்,

(ii) 6 மாதங்கள் தெமற்றக்கொடை டீசல் கொட்டில்களிலும்,

(iii) 3 மாதங்கள் மாளிகாவத்தை பிரயாணிகள் பண்டங்கள் பெட்டிகள் பகுதியிலும், அதில் 1 மாதம் கொழும்பு சாலையிலும், கொழும்பு சாலை அதிபருடனும்,

(iv) 1 மாதம் நாவலப்பிட்டியா கொட்டிலிலும், வேலை பார்க்க வேண்டும்.

(இ) 2 மாதங்கள் கட்டுப்பாடு செய்பவர்களுடன் புகை வண்டி கட்டுப்பாட்டு வேலையிலும்,

(ஈ) 5 மாதங்கள் இயக்கும் அதிபர் அலுவலகம் (புகை வண்டிப் பகுதியிலும்), ஏற்றியிறக்கற் கண்காணிப்பாளர் (இயக்கும் வலு) அலுவலகத்திலும், உதவி ஏற்றியிறக்கற் கண்காணிப்பாளர் (வெளியிடங்கள்) அலுவலகத்திலும் பிரதம முகாமையாளர் அலுவலகத்திலுள்ள பரிபாலன உத்தியோகத்தர், அலுவலக உத்தியோகத்தர் அலுவலகங்களிலும், மருதானையிலுள்ள பண்டகப் பகுதியிலும், ஒரு பகுதியில் ஒரு மாதம் வீதம் வேலை பார்க்க வேண்டும்.

(உ) புகையிரதப் பகுதி பாதுகாப்பு விதிகளில் நியமனம் கிடைத்த மூன்று வருடங்களுக்குள் திறமையுடன் தேர்ச்சியடைய வேண்டும்.

(ஊ) புகையிரதப் பகுதி அறிவுறுத்தல்களிலும், அரசாங்க சேவைக் குழுவின் விதிகளிலும், பரிபாலன விதிகளிலும், நிதிப்பிரமாணங்களிலும், புகையிரதப் பகுதியைப் பொருத்தவரையில், நியமனம் கிடைத்த நான்கு வருடங்களுக்குள் திறமையுடன் தேர்ச்சியடையவேண்டும்.

(எ) லண்டன் மெக்கானிக்கல் எஞ்சினியர்ஸ் இன்ஸ்டிடியூட்டின் கிராட்ஜுவேட் அங்கத்துவம் அல்லது அதற்கு சமமானதை ஐந்து வருட தகுதிகாண் காலம் முடியும் பொழுதோ அல்லது முடியுமுன்னே பெற வேண்டும்.

(ஏ) அவர்கள் எந்தப் பதவியிலும் பதிற்கடமை செய்யவோ, அனுபவம், பொறுப்பு, அறிவு, பரந்த மனப்பான்மை எல்லாம் புகையிரதப் பகுதி வேலைகளைப் பற்றி கிடைக்கக் கூடியதாக எந்த வேலையையும் கடைசி இரண்டு வருடங்களில் கூடிய சம்பளம் இல்லாமல் செய்ய வேண்டும்.

(iii) ஒவ்வொரு தனிப்பயிற்சியாளரின் தேவையைப் பொறுத்து எந்த ஒரு பயிற்சியின் பயிற்சி காலத்தை பிரதம அதிபரின் விருப்பப்படி மாற்றக்கூடும். நியமனம் பெற்றவர்கள் கூறப்பட்ட நிபந்தனைகளில் திருப்தி அளிக்காவிட்டால் அல்லது பயிற்சியின் எந்தக் காலத்திலாவது வேலையிலோ குணத்திலோ திருப்தியான அறிக்கை எடுக்காவிட்டால் வேலையிலிருந்து நீக்கப்படுவர்.

(iv) பயிற்சியிலும், கூறப்பட்ட பரீட்சைகளிலும் சித்தியடைவாரானால், அவர்களை உதவி பிரிவு ஏற்றியறக்கற் கண்காணிப்பாளர் பதவிகளில் காலி இடங்கள் வரும்வரை மேலதிகமான உதவி பிரிவு ஏற்றியிறக்கற் கண்காணிப்பாளராக ரூ. 5,160/—3 × 360—6,240/6,960—4 × 360, 10 × 480—ரூ. 13,200/- வருடத்திற்கு (ரூ. 11,280/- ல் இரண்டு வருடங்களுக்கு நிற்பாட்டி, ரூ. 6,960/- லும், ரூ. 11,280/- லும் வினைத்திறமை காண் தடையுடன்) என்னும் சம்பளத்திட்டத்தில் நியமிக்கப்படுவர்.

3. சம்பளமும் படிகளும் :—

இப்பதவிக்குரிய சம்பளத்திட்டம் பின்வருமாறு :—
ரூ. 4,080—360—6,240/- வருடத்திற்கு.

குறிப்பு :—

தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் லண்டன் மெக்கானிக்கல் எஞ்சினியர்ஸ் இன்ஸ்டிடியூட்டின் கிராஜுயேட் அங்கத்துவம் அல்லது அதற்கு சமமான தகைமை பெறப்பட்டால் அவர்களுடைய சம்பளத் திட்டம் ரூ. 5,160—3 × 360—6 × 240/6,960—4 × 360, 10 × 480—ரூ. 13,200/- வருடத்திற்கு (ரூ. 11,280/- ல் இரண்டு வருடங்களுக்கு நிற்பாட்டி, ரூ. 6,960 க்கும், ரூ. 11,280 க்கும் முன்னும் வினைத் திறமைகாண் தடையுடன்). இலங்கை பல்கலைக்கழகத்தின் எஞ்சினியரிங் பட்டமோ அல்லது அதற்கு சமமான பட்டமோ பெற்றவர்களும் மேலே குறிப்பிட்ட சம்பளத் திட்டத்திற்கு உரித்தாவர்.

(i) மேலே காட்டிய சம்பளத்திட்டத்தில் ரூ. 10,800/- க்கு மேல் சம்பளம் எடுப்பதற்கு அவர்கள் ஏ. எம். ஐ. மெக். ஈ. பட்டம் பெற வேண்டும்.

(ii) அபேட்சகர் ஏ. எம். ஐ. மெக். ஈ. பட்டத்துடன் தெரிவு செய்யப்பட்டால் அவருடைய தொடக்கச் சம்பளம் ரூ. 7,320/- வருடத்திற்கு. அவர் மேலே பந்தி 2 (ii) (உ), (ஊ) வில் கூறப்பட்ட பகுதிப் பரீட்சைகளில் நியமனம் கிடைத்த இரண்டு வருடங்களுக்குள் சித்தியடைய வேண்டும்.

(iii) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் ரூ. 7,320/- க்கு வருமுன் ஏ. எம். ஐ. மெக். ஈ. பட்டம் பெற்றால், அவர் பட்டம் பெற்ற திகதியிலிருந்து ரூ. 7,320/- சம்பளம் பெறுவதற்கு உரித்தாவர். அவர் இந்த சம்பளம் கிடைத்த இரண்டு வருடங்களுக்குள்ளோ அல்லது தகுதிகாண் காலமுடிவிற்குள்ளோ, எது முன்னுக்கு வருகிறதோ அதற்குள் மேலே பந்தி 2 (ii) (உ), (ஊ) வில் கூறப்பட்ட பரீட்சைகளில் சித்தியடைய வேண்டும்.

4. தேவையான தகைமைகள் :—

ஒவ்வொரு அபேட்சகரும் கீழ் காண்பவைக்கு திருப்தியான அத்தாட்சி காட்ட வேண்டும் :—

(அ) நற்குணமுடையவரென்றும், தேகாரோக்கியமுடையவரென்றும்.

(ஆ) 1969 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 7 ந் திகதியன்று, வயதில் 21 வருடங்களுக்கு குறையாமலும், 30 வருடங்களுக்கு மேற்படாமலிருப்பவரென்றும்,

(இ) (i) இலங்கை பல்கலைக்கழகத்தின் பட்டம் எஞ்ஜினியரிங்கில் பெற்றவராயோ அல்லது அதற்கு சமமான மதிக்கப்பட்ட பட்டம் பெற்றவராயோ அல்லது,

(ii) லண்டன் மெக்கானிக்கல் எஞ்ஜினியரிங் இன்ஸ்டிடியூட்டின் கிராஜுயேட் அங்கத்துவம் அல்லது அதற்குச் சமமானதைப் பெற்றவராயோ அல்லது,

(iii) இலங்கை பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பாடங்களில் பட்டம் பெற்றவராயோ அல்லது அதற்கு சமமான பட்டம் பெற்றவராயோ இருத்தல் வேண்டும்.

குறிப்பு :—

புகையிரதப் பகுதி ஊழியர்கள் மேலே கூறப்பட்ட தகைமைகள் இருப்பின் 30 வயதிற்கு மேற்பட்டாலும் விண்ணப்பங்கள் கிடைப்பதற்கென நியமிக்கப்பட்ட கடைசித் திகதியன்று 35 வயதிற்கு மேற்படாமல் இருந்தால் விண்ணப்பிக்கலாம்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ். (முக்கிய குறிப்பு—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்,

(இ) குணச்சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்,

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழிட்நுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழில் நுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்,

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு :—

(1) சாதனங்களாயினும், சாதனங்களின் படிகளாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக் கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக் கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும், அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரச் சபை, என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காகிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பி திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டி. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500, காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 16.1.1969.

1—978/4—24.1.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,838

---

## அரசாங்க அச்சகத் திணைக்களம்
### அதிகாரிப் பகுதி

அரசாங்க அச்சகத்தில் அதிகாரிப் பதவியொன்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தால் அளிக்கப்படும் படிவங்களில் இருத்தல் வேண்டும். அவை அரசாங்க அச்சாளர், கொழும்பு 8 என முகவரியிடப்பட்டு அவர்வசம் 1969 ம் ஆண்டு பெப்ருவரி 22 ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் சேரும் வண்ணம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பமோ அல்லது அதற்காய தொடர்புகளோ அரசாங்க அச்சாளருக்கேயன்றி, காரியாலயத்தில் தொழில் புரியும் எந்த உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் முகவரியிடப்படல் ஆகாது.

2. சம்பள அளவுத்திட்டம்.—வருடமொன்றுக்கு 4,080 ரூபா தொடக்கம் 8,400 ரூபா வரை, 360 ரூபாவான 12 வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொண்டிருக்கும்.

3. வயதெல்லை.—22 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்குக் கூடாமலுமிருத்தல் வேண்டும். காரியாலய விண்ணப்பதாரிகளுக்கு இவ்வயதெல்லைகள் பிரயோகிக்கப்படமாட்டா.

4. கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்.—

(i) நன்கு மதிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தினது இரசாயனத்தை ஒரு பாடமாகக் கொண்ட ஒரு பட்டம்;

பௌதிகவியலில் அறிவுடைமை ஒரு கூடுதலான தகைமையாகும்.

(ii) காரியாலய பரீட்சார்த்திகள்—

(அ) சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதே தரத்தையுடைய அல்லது அதனிலுந் தரங் கூடிய பரீட்சை ஒன்றில் தேர்ச்சி பெற்றவராயும் அரசாங்க அச்சகத்தின் அச்சுத்தொழிலின் யாதேனுமொரு தொழில் நுட்பக் கிளையில் குறைந்தது 10 வருட கால அனுபவம் பெற்றவராயும் இருத்தல் வேண்டும்;

அல்லது

(ஆ) அரசாங்க அச்சகத்தின் அச்சுத்தொழிலின் யாதேனுமொரு தொழில் நுட்பக் கிளையில் குறைந்தது 15 வருடகால அநுவம் பெற்றவராயிருத்தல் வேண்டும்.

(இ) பிரிவுகள் (அ), (ஆ) களில், அரசாங்க அச்சகத்தில் உள்ள அச்சுத் தொழிலின் தொழில்நுட்பக் கிளையில் நிலையான பதவிகள் வகிக்கும் உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள் மட்டுமே கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படும்.

(iii) இலண்டன் அச்சு, வரைவுக்கலைப் பாடசாலை, மான்செஸ்டர் தொழில் நுட்பக் கல்லூரி, இலண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிலையம், பிரித்தானிய மூல அச்சாளர் குழு, மேலும் இவை போன்ற வேறு நன்கு மதிக்கப்பட்ட கல்லூரிகளின் அல்லது நிலையங்களின் தகுதித் தேர்வுச் சான்றிதழ்கள், தராதரச் சான்றிதழ்கள் அளிப்புக்கள் முதலியன ஒரு கூடுதலான தகைமை எனக் கருதப்படும்.

5. **ஆட்சேர்ப்பு முறை.**—இத்தேவைக்காக அமைக்கப்படும் சபையால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையே ஆட்சேர்ப்புக்குரிய முறையாகும்.

6. **நியமன விதிகள்.**—இப்பதவி நிலையானதும் உபகாரச் சம்பளம் கொண்டதுமாகும். விதவை, அநாதை உபகாரச் சம்பளத் திட்டத்துக்கு உதவுதொகை அளிக்கப்படும்.

7. **சேவை நிபந்தனைகள்.**—

(i) தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி அரசாங்க அச்சகத்தினுள் உள்ள பல கிளைகளுக்கும் இடமாற்றம் செய்யப்படக்கூடும்.

(ii) தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி, அவர் இணைக்கப்பட்ட கிளைக்கேற்ப, பகலிலோ அல்லது இரவிலோ வேலை செய்ய வேண்டப்படுவர். பாராளுமன்றக் கிளைக்கு (இரா அதிகாரியாக) இணைக்கப்படின், தேர்ச்சிபெற்ற பரீட்சார்த்தி நிரந்தரமாக இராச்சேவையில் இருப்பார்.

(iii) தேர்ச்சிபெற்ற பரீட்சார்த்தி பாராளுமன்றக் கிளைக்கு (இரா முறையில்) இணைக்கப்படின், சம்பளத்தின் (ஆரம்பச் சம்பளத்தின்) 15 சதவீத தொகை படியாக வழங்கப்படும்.

(iv) நியமனம் மூன்று வருடங்களுக்குத் தகுதிகாண் நிலையில் இருக்கும்.

(v) நிலையான, உபகாரச் சம்பள உத்தியோகத்தர்கள் தேர்ந்தெடுக்கப்படின், அவர்கள் பதில் கடமையாற்ற நியமிக்கப்படுவர்.

8. அரசாங்க வர்த்தமானியின் பிரிவு (I), பகுதி (II) இன் ஆரம்பத்தில் பிரசுரம் செய்யப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பகுதிகளுக்குச் செய்யப்படும் நியமனங்களுக்கான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகிறது.

9. தேவை ஏற்படின் நியமனம் செய்யப்படுவோர் காரியாலயத்தின் அறிவுறுத்தல்களுக்கும் அங்கீகாரத்திற்கும் ஏற்ப, இங்கோ, வெளிநாடுகளிலோ அச்சிடுதலிலும் வரைபுக் கலைகளிலும் அச்சிடுதல் நிர்வாகத்திலும் பயில்வு பெற வேண்டப்படுவர். இப்பயில்வுக்கான ஒழுங்குகள் ஏற்படுத்தப் படும்பொழுது அதற்கான நிபந்தனைகள் நியமனம் பெற்றவருக்கு அறிவிக்கப்படும்.

10. எல்லா விண்ணப்பங்களுக்கும் பதிலுரை அளிக்கப்படும். முடிவு திகதிக்கு ஏழு தினங்களுக்குள் பதிலுரை பெறு விண்ணப்பதாரிகள் உடனடியாக அரசாங்க அச்சாளருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும். இவ்வேற்பாட்டிற்கு இணங்கா விண்ணப்பதாரிகள் மேலும் கவனத்துக் கெடுத்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

11. விதித்த படிவங்களில் விண்ணப்பம் செய்யுமுன்னர் பரீட்சார்த்திகள் சகல விதங்களிலும் விண்ணப்பம் செய்யத் தகைமை வாய்ந்தவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் இவ்வறிவிப்பின் தேவைகளை நன்கு படித்தறியுமாறு (அவர்கள்) அறிவுரைக்கப்படுகின்றனர். பரீட்சார்த்திகள் இவ்வறிவிப்பை நன்கு உசாவி, பொருத்தமான எல்லாத் தகவல்களையும் படிவத்தில் அளித்தல் வேண்டும்.

12. விண்ணப்பத்துடன் சாதனமேதும் அனுப்புதலாகாது. இருந்தும், வேண்டப்பட்ட பொழுது கீழ்க்காணும் சாதனங்கள் யாவற்றையுமோ அல்லது யாதனையுமோ விண்ணப்பதாரிகள் கேட்கும்போது சமர்ப்பிக்க வேண்டும். அவை யாவன :—

(1) பிறப்புப் பத்திரம்.

(2) பல்கலைக்கழக பட்டம் அல்லது வேறு தகைமை.

(3) இரு நன்னடத்தைச் சான்றிதழ்கள், இவற்றுள் ஒன்று கல்விப் பணிப்புரையாளர் அல்லது கல்லூரி விரிவுரையாளர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்.

(4) உயர்தொழில்/அல்லது தொழில் நுட்பத் தகைமைகளுக்கான சான்றிதழ்கள்.

(5) சிங்கள/தமிழ் இல் தேர்ச்சிபெற்ற உயர்ந்த தகைமைக்கான சான்றிதழ்.

எல். டப்ளியு. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அச்சாளர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1969 ம் ௵ சனவரி மீ 19 ந் உ.

1—1045—24.1.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,838

---

## விவசாய, உணவு அமைச்சு

### நூல் நிலையப் பொறுப்பாளர் பதவி

மேற்படி பதவிக்காக 29.11.68 ந் திகதிய 14,830 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட விளம்பரம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதென்பது இத்தால் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தப்படுகின்றது.

நிரந்தரச் செயலாளர்,
விவசாய, உணவு அமைச்சு.

12.1.1969.

1—834/1—24.1.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,838.

---

## விவசாய, உணவு அமைச்சு

### நூல் நிலையப் பொறுப்பாளர் பதவி

விவசாய, உணவு அமைச்சில் நூல் நிலையப் பொறுப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப்படிவ முறையில் தயாரிக்கப்பட்டு 1969.2.10 திகதி அல்லது அதற்கு முன்னர் கொழும்பு 2, யூனியன் பிளேஸில் அமைந்துள்ள விவசாய, உணவு அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகள் :** இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். விதவைகள் அநாதைகள் உபகாரச் சம்பளத் திட்டத்திற்கு உதவு தொகை செலுத்த வேண்டும். நியமனங்கள் பொதுவாக மூன்று வருட காலத்திற்கு தகுதிகாண் முறையில் அமையும்.

3. **தேவையான தாரதரங்கள் :** இப்பதவிக்காக விண்ணப்பிக்கும் ஒவ்வொருவரும் கீழ்க்காணும் தகைமைகளையுடையவர் என்பதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்று காட்ட வேண்டும் :—

(i) 1969.2.10 தேதியில் 21 வயதிற்குக் குறையாதவராயும், 35 வயதிற்கு மேற்படாதவராயும் (ஏற்கனவே அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ii) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(iii) (அ) கணிதம், பொருளாதாரம், புவியியல், பௌதிகவியல், விவசாயம் அல்லது உயிரியல் ஆகிய பாடங்களில் நான்கிலும், ஆங்கிலப் பாஷையிலும் திறமைச் சித்தியுடன் சிரேட்ட பாடசாலை தாரதரப் பத்திரம், அல்லது

(ஆ) க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில், சிங்களம்/தமிழ் பாஷையுடன் கணிதம்/எண் கணிதம் ஆகியவை உட்பட மேலும் நான்கு பாடங்களில் (கணிதம், பொருளாதாரம், புவியியல், தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், பௌதிகவியல், விவசாயம் அல்லது உயிரியல் ஆகிய பாடங்களில் நான்கிலும், ஆங்கிலப் பாஷையிலும் திறமைச் சித்தியுடன்) இரண்டிற்கு மேற்படாத இருக்கைகளில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

4. சேவை நிபந்தனைகள் :

அரசகரும மொழிக்கொள்கையின் பொருட்டு அரசாங்க சேவைக்கு புதிதாக சேர்ந்த உத்தியோகத்தராயின்

(i) அவருடைய தகுதிகாண் காலம் மூன்று வருடமாகவிருக்கும்.

(ii) அவர் 1956 இன் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனி மேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) அவருடைய தகுதிகாண் காலத்திற்குள் அரசகரும மொழியாகிய சிங்களத்தில் செயலாற்றுவதற்குப் போதுமான அறிவு பெறல் வேண்டும்.

(iv) தகுதிகாண் கால முடிவில் நியமனத்தில் உறுதிப்படுத்துதல் பிறவற்றுடன், நியமனத் திகதியிலிருந்து முறையே, ஒரு வருடத்தில், இரண்டு வருடத்தில், மூன்று வருடத்தில், 1 ம், 2 ம், 3 ம் தர சோதனைகளில் (அல்லது பொருத்தமானவிடத்தில் ஒரு வருடத்தில் அல்லது 2 வருடங்களில் 1 வது 2 வது தரச் சோதனைகளில்) சித்தியடைதலைப் பொறுத்ததாகும். குறிப்பிட்ட கால எல்லைக்குள் குறிப்பிட்ட பரீட்சைகளில் சித்தி பெறுவிட்டால், அவருடைய சம்பள உயர்வு இடைநிறுத்தஞ் செய்யப்படும். குறிப்பிட்ட காலத்திற்கு பின்பு 6 மாத காலத்திற்குள் சோதனைகளில் சித்திபெறுவிட்டால், இடைநிறுத்தஞ் செய்யப்பட்ட சம்பள உயர்வு நிறுத்துகையாக மாற்றப்பட்டு, சோதனையில் சித்தி பெறும் வரை அல்லது கீழே (v) ல் உள்ள ஏற்பாடுகளுக்குரித்தான காலம் வரையுமோ அந் நிறுத்துகை செயல்படும்.

(v) தகுதிகால முடிவில் குறிப்பிட்ட சிங்களத் தேர்ச்சியைப் பெறுவிட்டால் 120, 121 இலக்க திருவாகப் பிரமாணங்களின் ஏற்பாடுகள் பொருந்தும். (மேலே கூறப்பட்டுள்ள (iii), (iv), (v) ஆகிய நிபந்தனைகள் சிங்களமூலம் சேவைக்கு சேர்ந்தவர்களுக்குப் பொருந்தாது).

(vi) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் விவசாய, உணவு அமைச்சின் நிரந்தரச் செயலாளர் தீர்மானிக்கும் முறைப்படி பிணைப்பணம் கட்ட வேண்டும்.

5. சம்பளம் :

இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் :—

ரூபா 960—72 × 24—ரூபா 2,688 வருடாந்தம். 1608 ரூபாவையும், 2,184 ரூபாவையும் வருடாந்தச் சம்பளமாகப் பெறமுன்பு வினைத்திறமைகாண் தடைகள் உண்டு.

6. ஒவ்வொரு விண்ணப்பகாரரும் தமது விண்ணப்பப் பத்திரத்துடன் கீழ்க்காணும் சான்றிதழ்களின் பிரதிகளையும் (மூலப் பிரதிகளையல்ல) இணைத்து அனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்.

(ஆ) விண்ணப்பதாரர் பெற்றுள்ள ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) இப்பதவிக்காக விண்ணப்பகாரரின் ஒழுக்கம் சம்பந்தமாக சமீபகால நற்சான்றிதழ்கள் இரண்டு. (ஏற்கனவே அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பகாரரிடமிருந்து இவ் உப பிரிவின் கீழ் சான்றிதழ்கள் வேண்டப்படமாட்டாது.)

7. திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட்டு குறிக்கப்பட்ட திகதிக்குப் பின்பு இவ் அலுவலகத்தில் கிடைக்கப் பெறும் விண்ணப்பப் பத்திரம், அத் திணைக்களத தலைவருக்கு குறிக்கப்பட்ட காலத்திற்கு முன் கிடைக்கப்பெற்று, அங்கு தாமதமானதெனில் அத்தாமதத்திற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் காட்டி அவ் விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அத்திணைக்களத் தலைவர் சிபாரிசு செய்தாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

8. இப்பதவிக்காக அனுப்பப்படும் விண்ணப்பப்பத்திரங்களும், அவை சம்பந்தமாக அனுப்பப்படும் கடிதங்களும் விவசாய, உணவு அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டுமேயன்றி இவ் அமைச்சின் எந்த அலுவலாளர் பெயருக்காயினும் அனுப்பக்கூடாது.

பீ. மகாதேவ,
விவசாய, உணவு அமைச்சின் நிரந்தரச் செயலாளர்.

விவசாய, உணவு அமைச்சு,
330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
12.1.1969.

## விவசாய, உணவு அமைச்சின் நூல் நிலையப் பொறுப்பாளர் பதவிக்கான விண்ணப்பப் பத்திரம்

(1) முழுப் பெயர் :————
(தனித்தனி எழுத்துக்களில்)

(2) விலாசம் :————

(3) பிறந்த திகதியும் இடமும் :————

(4) 1969.2.10 திகதியன்றுள்ளபடி வயது :
வருடம்————மாதம்————நாள்————

(5) தேசிய இனம் :————

(6) கல்வித் தகைமைகள், சித்தியெய்திய திகதியுட்பட :————
(பெறப்பட்டுள்ள ஆகக்கூடிய கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).

(7) தொழில் தகைமைகள் :————

(8) கல்விகற்ற பாடசாலைகளும் கல்லூரிகளும் (சேர்ந்த நாளையும் விலகிய நாளையும் குறிப்பிடுக) :————

(9) நூல் நிலைய வேலை சம்பந்தமாக அனுபவம் :————

(10) நன்சான்றிதழ்கள் கொடுத்தவர்களுடைய (உறவினர்கள் அல்ல) பெயரும் பதவியும் :————

(11) வேறு தகைமைகள் :————

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இவ் விண்ணப்பப்பத்திரத்தில் எவையேனும் பொய்யான அல்லது பிழையான விபரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றதென தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின் காணப்படின் சேவையிலிருந்து எவ்வித நஷ்டஈடுமின்றி நான் விலக்கப்படுவதற்கும் பாத்திரராவேன்.

திகதி :————　　　　　　————
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

1—834/2—24.1.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,833

இல. வெ.மு/5/158

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பகுப்பு இரசாயனத்தில் பட்டப்பின் பயிற்சி நெறி—செக்கோசிலோவேகியா—1969/70 ஆம் ஆண்டு

யூனெஸ்கோவின் ஆதரவில் பிரேக் (Prague) நகரத்திலுள்ள சாள்ஸ் பல்கலைக் கழகத்தால் பகுப்பு இரசாயனத்தில் வழங்கப்படும் பட்டப்பின் பயிற்சிக்கான இணையுரிமைப் பரிசில்கள் அளிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பயிற்சி நெறியின் நோக்கம் பின்வருமாறு :—

(அ) பகுப்பு இரசாயனம், பௌதீக இரசாயனம், பௌதீக இரசாயனப் பகுப்பு முறைகள் ஆகியவற்றில் போதனா பயிற்சியும் குறிப்பாகச் செயல்முறைப் பயிற்சியும் ஏற்பாடு செய்தல்.

(ஆ) முனைவாக்கப் பதிவியல், மின் இரசாயன பகுப்பு முறைகள், நிறப் பதிவியல், ஒளியியல் முறைகள் ஆதியனவற்றில் மட்டுப்படுத்திய பரிசோதனை ஆராய்ச்சி முறைகளில் தனித்தனியாகப் பங்கு பற்றுதலைச் சாத்தியப்படுத்துதல்.

(இ) விசேட கருத்தரங்குகளில் இரசாயனத்தைப் படிப்பிப்பதில் நிலவும் நவீன போக்குகள் தொடர்பான விரிவுரைகள், செய்துகாட்டுதல், உரையாடுதல்கள் ஆகியவற்றை ஒழுங்கு செய்தல்.

(ஈ) செக்கோசிலேவேக்கியா விஞ்ஞான கலை அவையின் பல்கலைக் கழகப் பகுதிகள், நிலையங்கள் ஆகியவற்றில் ஆராய்ச்சி வேலைகள் சம்பந்தமான ஒழுங்கு முறைகள் பற்றியும் இரசாயன ஆராய்ச்சி வேலைக்கு இளம் விஞ்ஞானிகளின் பட்டப்பின் பயிற்சி பற்றியும் அறிவுறுத்தல்.

பயிற்சி நெறி நடைபெறும் முழுக்காலமும் இடம்பெறும் சகல பயிற்சிகளிலும் ஒழுங்காகப் பங்குபற்றி தமது வேலையில் வெற்றியீட்டுபவர்களுக்கு வரவுச் சான்றிதழ் வழங்கப்படும்.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1.—புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு 2.—சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

2. கால எல்லை : பயிற்சி நெறி 1969 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் 10 மாத கால அளவினதாகும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்று காரணங்களையிட்டு பயிற்சி நெறியை ஒழுங்குபடுத்தும் அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. தகவுத்திறன் : அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யவேண்டும் :—

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1.10.1969 அன்று 45 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் இரசாயனத்தில் வழங்கப்படும் விஞ்ஞான முதுமானிப் பட்டம் அல்லது அதற்குச் சமனான தகைமை பெற்றிருக்க வேண்டும்.

(iv) இரசாயன ஆராய்ச்சியில் செய்முறை வேலையில் அல்லது ஒரு பல்கலைக் கழகத்தில் அல்லது ஒரு விஞ்ஞான நிலையத்தில் படிப்பிப்பதில் குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(v) ஆங்கிலத்தில் (பேசுவதிலும் எழுதுவதிலும்) உயர்தர தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு 1.—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறிசெய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.10.69 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணபித்தலாகாது.

4. அளிப்பு நிபந்தனைகள் : இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) இலங்கையிலிருந்து பிரேக் நகரத்துக்கு போய்த் திரும்புதற்கான விமான மூலச் சுற்றுப்பயணத்தார் வகுப்புப் பிரயாணச் சீட்டு.

(ஆ) பயிற்சி நடைபெறும் காலத்தில் மாதாந்த வேதனமாக 1,600 செக்கோசிலவேக்கியா கிறவுன்கள்.

(இ) மாணவர் விடுதிச்சாலை ஒன்றில் இலவச இடவசதி.

(ஈ) இலவச வைத்திய வசதிகள்.
(பயிற்சி நெறியில் பங்குபற்றுவோரின் குடும்பங்களுக்கு இடவசதியேனும் மேலதிக நிதி உதவியேனும் வழங்கப்படமாட்டாது.)

குறிப்பு :—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. நேர்முகப் பரீட்சை :—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை** :—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், செக்கோசிலேவேகியாவுக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்த வரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்திய பரீட்சை** :—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் செக்கோசிலேவேகியாவில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன் மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேறவேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார்.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீட்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவுவேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1969 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 8 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூ. 10/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூ. 10/- பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2.
12.1.1969.

1-887—24.1.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,838

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. *அதிபர், செய்தி—வெளியீட்டுப்பகுதி.*

**தகைமைகள்.**—(அ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு சர்வகலாசாலையில் விசேட அல்லது உயர்தரப் பட்டம், அல்லது அதற் கிணையான தகைமையும் பொது அல்லது தனியார் துறையில் உயர் பதவியில் 10 ஆண்டு அனுபவமும், பத்திரிகை அனுபவமும் இருப்பது நலம். அல்லது,

அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையில் பட்டமும் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகை அல்லது ஒலிபரப்புத் தாபனத்தில் செய்திப் பகுதியில் 10 ஆண்டு அனுபவம் அல்லது,

அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையில் இடைநிலைப்பரீட்சையில் அல்லது அதற்கு இணையான பரீட்சையில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகைத் தாபனத்தில் ஆசிரிய பதவியில் அல்லது ஒலிபரப்புத் தாபனத்தில் செய்திப்பகுதியில் 15 ஆண்டு அனுபவம்.

(ஒலிபரப்புப்பகுதி/கூட்டுத்தாபனத்தில் 20 ஆண்டுகளுக்குக் குறையாத ஒலிபரப்பு அனுபவமுடைய உத்தியோகத்தர்கள் குறைந்த பட்சம் லண்டன் மெற்றிகுலேஷன் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருந்தால் மேற்கூறப்பட்ட கல்வித் தகைமைகள் தேவையில்லை). அத்துடன்

(ஆ) சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் நல்ல அறிவு. தமிழறிவு மேலதிக யோக்கியதாம்சமாகும்.

(இ) தேசிய, சர்வதேசச் செய்திகளில் சிறந்த அறிவு.

(ஈ) வெளியீடுகள் தயாரித்தலிலும் நிர்வாகத்திலும் அறிவு.

**வேதன விகிதம்.**—மாதம் ரூ. 1,250-1,750 (5 × 50) ரூ. 1,350 க்கு முன் திறமைக் கடவை.

**வயது.**—30-45 ஆண்டுகள்.

(2) *பகுதித் தலைவர் (நிகழ்ச்சிகள்) ஆங்கிலம்.*

**தகைமைகள்.**—(அ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு சர்வகலாசாலையில் பட்டம் அல்லது டிப்ளோமாவும், பொது அல்லது தனியார் துறையில் 5 ஆண்டு நிர்வாக அனுபவமும், அங்கீகரிக்கப்பட்ட ஒலிபரப்புத் தாபனத்தில் குறைந்த பட்சம் 3 ஆண்டு அனுபவமும். அல்லது,

அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையில் இடைநிலைப்பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியும் ஒலிபரப்புவதிலும் நிகழ்ச்சி நிர்வாகத்திலும் குறைந்த பட்சம் 10 ஆண்டு அனுபவமும். அல்லது,

க. பொ. த. (சாதாரணம்) அல்லது அதற்குச் சமமான அல்லது அதனினும் உயர்ந்த பரீட்சையில் ஒரே முறையில் எண்கணிதம்/கணிதம், சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் உட்பட, ஆறு பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட ஒலிபரப்புத் தாபனத்தில் நிகழ்ச்சிப்பகுதியில் 12 ஆண்டு அனுபவம். அத்துடன்,

(ஆ) இலங்கையைப்பற்றியும் அதன் விவகாரங்கள் கலாசாரம் பற்றியும் சிறந்த அறிவும் நல்ல இலக்கிய கலாச்சாரப் பின்னணியும்.

**வேதன விகிதம்.**—மாதம் ரூ. 720—1200 (7 × 40 + 4 × 50) ரூ. 920 க்கு முன் திறமைக் கடவை.

**வயது.**—30—45 வருடம்.

(3) *அறிவிப்பாளர்—தரம் II—ஆங்கிலம்.*

**தகைமைகள்.**—(அ) அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலை அல்லது தாபனத்தில் இடைநிலைப் பரீட்சை அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி. அதில் ஆங்கிலம் ஒரு பாடமாயிருத்தல் வேண்டும். அல்லது,

சி. பா. த. அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஒலிபரப்புத் தாபனத்தில் பகுதிநேர அறிவிப்பாளராகக் குறைந்த பட்சம் 3 ஆண்டு அனுபவமும் அல்லது,

சி. பா. த. அல்லது அதற்குச் சமமான, பரீட்சையில் சித்தியும் அறிவிப்புகள் தேவைப்படும் நிகழ்ச்சிகளுக்கு ஒப்பந்த உத்தியோகத்தராக, ஒலிபரப்புப் பகுதியில்/கூட்டுத்தாபனத்தில் 3 ஆண்டுக்குக் குறையாத அனுபவமும், அத்துடன்,

(ஆ) சிறந்த இலக்கிய அல்லது கலாச்சாரப் பின்னணியும் ஆக்கத்திறனும் தற்கால விவகாரங்கள் பற்றிய அறிவும்.

(இ) சிறந்த தரத்தில் ஒலிவாங்கிக்கேற்ற குரலும் தனிப் பண்பும், ஏற்கத்தக்க உச்சரிப்பும்.

**விசேட விதி விலக்கு.**—ஒலிபரப்புப்பகுதி/கூட்டுத்தாபனத்தில் 8 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவமுடையவர்களுக்கு மேலே (அ) வில் குறிப்பிடப்பட்ட தகைமைகளிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படும்.

**வேதனவிகிதம்.**—மாதம் ரூ. 450—675 (5 × 20 + 5 × 25) ரூபா 510 க்கு முன் திறமைக் கடவை.

**வயது.**—23—40 வருடம்.

விண்ணப்பங்கள் இத்துடன் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் பத்திரத்தின் வடிவில் அமைக்கப்பட்டு "மா அதிகாரி, இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் கொழும்பு—7" என்ற விலாசத்துக்கு 8.2.69 க்கு முன் கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். உறையின் இடது புற மேல் மூலையில் பதவிக்கேற்ப அதிபர், செய்தி—வெளியீட்டுப்பகுதி/பகுதித்தலைவர் (நிகழ்ச்சிகள்) ஆங்கிலம்/அறிவிப்பாளர், தரம் II, ஆங்கிலம் என்று குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

என். டி. ஜயவீர,
மா-அதிகாரி.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்,
கொழும்பு — 7,
15, ஜனவரி, 1969.

### மாதிரி விண்ணப்பப்பத்திரம்

.................................................. பதவி.

1. முழுப் பெயர் :————.
2. விலாசம் :————.
3. தேசிய இனம் :————.
4. விண்ணப்பக்காரர் பிறந்த இடமும், திகதியும் :————. (பிறப்புப் பத்திர நகல் இணைக்கப்படல் வேண்டும்)
5. விண்ணப்பக்காரரின் தந்தை பிறந்த இடம் :————.
6. கல்வித் தகைமைகள் :————.
   சிங்களம் :————.
   தமிழ் :————.
   ஆங்கிலம் :————.
7. நற்சாட்சிப் பத்திரம் வழங்கியுள்ளோர் பெயர்களும், விலாசங்களும் :————. (நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப் படல் வேண்டும்)
8. முன் வகித்த உத்தியோகம் பற்றிய விபரங்கள் : ————.
9. பிற விபரங்கள் :————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் உறுதிப்படுத்துகிறேன். நான் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத் தாபனத்தில் நியமனம் பெற்று, இதிலுள்ள விபரங்களில் ஏதுவேனும் பிழையெனக் காணப்பட்டால் நான் வேலையிலிருந்து நீக்கப்படலாம் என்பதையும் என் முந்திய உத்தியோகம் பற்றிய உண்மை எதையும் வேண்டுமென்றே மறைத்திருந்தாலும் எனக்கு அது போன்ற தண்டனை அளிக்கப்படலாம் என்பதையும் அறிகிறேன்.

————————,
விண்ணப்பதாரர் கையொப்பம்.

திகதி :————.

1-926—24.1.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,838

## கொழும்பு மாவட்டத்தில் கொஸ்கம பிரிவிற்கு பிறப்பு, இறப்பும் கேவகம் கோறளை பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

கொஸ்கம பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொதுமக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தைந்து வயதிற்கு குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களை பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும் ஏனைய பிற தராதரங்கள் நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராமசேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச்சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவு தாபன நிலையங்களிலும், இந்த பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1969 ம் ஆண்டு மாசி மாதம் 15 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

றிச்சட் குணசேகரா,
மாவட்டப் பதிவாளருக்காக.

கொழும்பு,
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
1969 ம் ஆண்டு தை மாதம் 12 ம் திகதி.

1-810—24.1.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,838

---

## குடிசார் விமானப் போக்குவரத்துத் திணைக்களம், இயந்திரத் தொழிலாளர் பதவி (காற்றுக் கட்டுப்படுத்தல்) தரம் I

குடிசார் விமானப் போக்குவரத்துத் திணைக்களத்தினுல் I ஆம் தர இயந்திர தொழிலாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க் கண்ட மாதிரிப் படிவத்தில் நிரப்பப்பட்டு குடிசார் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர், த. பெ. 535, லோற்றஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு 7.2.1969 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

2. சம்பள அளவுத் திட்டம்

முதல் ஆறு மாதங்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 3/86 வீதமாகவும் அதன் பின் ஆண்டொன்றிற்கு ரூபா 1170/- 42—ரூபா 1674/- வரை செல்லும்.

3. வயதெல்லை

7.2.69 ஆம் திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவுமிருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு உயர் வயதெல்லை செல்லுபடியாகாது.

4. அபேட்சகர்களிடமிருந்து வேண்டப்படும் தகைமைகள்

அபேட்சகர்கள் நல்லொழுக்கமுடையவர்களாகவிருப்பதுடன்,

(i) இயந்திரத் தொழிலாளராக (காற்றுக் கட்டுப்படுத்தலில் 10 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். இதில் 6 ஆண்டுகள் 1 ஆம் தரப் பொறித் தொழிலாளியாக இருந்திருக்க வேண்டும்.

(ii) காற்று கட்டுப்படுத்தற் கூறொன்றின் தொழிற்பாட்டைப் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகளின் அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) வரைவுப் படங்களைப் படித்து விளங்கிக் கொள்ளக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

(iv) எல்லா வகையான காற்றைக் கட்டுப்படுத்தும் அலகுகளைப் பற்றிய அறிவையுடையவராகவிருத்தல் வேண்டும்.

5. சேவை நிபந்தனைகள்

பதவி நிரந்தரமானதாகும். அரசாங்கத்தின் கீழ் 10 ஆண்டுச் சேவையைப் பூர்த்தி செய்த பின் உபகாரச் சம்பளம் பெறும் நிலை, 7.2.64 திகதியிட்ட 633 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் நிபந்தனைகளின்படி நிர்ணயிக்கப்படும்.

6. விண்ணப்பகாரர்கள் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலமல்ல) இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு. சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) கல்வித் தகைமைச் சான்றிதழ்.

(இ) தொழினுட்பத் தகைமைச் சான்றிதழ்.

(ஈ) நற்சான்றிதழ்கள்.

(உ) இரு குணச் சான்றிதழ்கள்.

7. இந்தச் செய்தி மடலில் பகுதி I தொகுதி II இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றது.

8. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் குடிசார் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளருக்கு முகவரியிட்டு அனுப்பவேண்டுமே அன்றி இத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

டபிள்யு. எல். பி. டி மெல்,
குடிசார் விமானப் போக்குவரத்து
பணிப்பாளர்.

குடிசார் விமானப் போக்குவரத்துத் திணைக்களம்,
த. பெ. எண். 535,
கொழும்பு 1, 1969 திசெம்பர் 21 ந் திகதி.

### விண்ணப்பப் படிவம்

### குடிசார் விமானப் போக்குவரத்துத் திணைக்களம், இயந்திரத் தொழிலாளர் பதவி (காற்றுக் கட்டுப்படுத்தல்) தரம் I

1. முழுப் பெயர் :————
(தடித்த எழுத்துக்களில்)
2. அஞ்சல் முகவரி :————
3. பிறந்த திகதியும் வயதும் :————
4. இலங்கைப் பிரசையா என்பதைக் குறிப்பிடுக : ————
அவ்வாறாயின்
 1. பரம்பரையாகவா ? :————
 2. பதிவு மூலமா ? :————

5. சித்தியடைந்த ஆகக் கூடிய பரீட்சை :————
(சித்தியடைந்த பாடங்களைக் குறிப்பிடவும்)

6. சித்தியெய்திய தொழினுட்பப் பரீட்சை.————

7. அனுபவம் :

8. விசேட தகைமைகள், உரிமைக் கோரிக்கைகள் ஏதேனும் இருந்தால் அவற்றைக் குறிப்பிடவும் :————

9. தற்போதைய/முன்னைய தொழிலின் விபரத்தைக் குறிப்பிடவும் :————

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இவ்விபரங்களில் யாதேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை எனத் தெரிவுக்கு முன் காணப்படின் நான் தகுதியற்றவராக்கப்படுவேன் என்பதையும், நியமனம் அளிக்கப்பட்ட பின் காணப்படின் எவ்வித நட்ட ஈடுமின்றி விலக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

————————
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————

1—912—23.1.69 ம் திகதிய வர்த்தமானி இல. 14,838

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

**கஷ்டமான பகுதிகளிலுள்ள அரசினர் பாடசாலைகளில் ஆங்கில உதவி ஆசிரியர்களாகச் சேவை புரிதற்கு ஆங்கில ஆசிரியர்களின் ஆட்சேர்ப்பு**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் தொகுதிகளிலுள்ள கஷ்டமான பகுதிகளிலிருக்கும் அரசினர் பாடசாலைகளில் சேவை புரிய ஆங்கில உதவி ஆசிரியர் பதவிகளுக்கு, கீழே கொடுபட்டுள்ள கல்வித் தகைமைகளில் யாதேனும் ஒன்றைப் பெற்றுள்ள இரு பாலையும் (ஆண், பெண்) சேர்ந்த அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு கொழும்பு 2, மலாய் வீதி, கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (பாடசாலை நிர்வாகக் கிளைக்கு) 1969 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 14 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " க. ப. ஆ. ஆசிரியர்க்கான விண்ணப்பம் " எனத் தெளிவாக அடையாளமிடப்பட வேண்டும்.

3. விண்ணப்பதாரி, தெரிவு செய்யப்படின், முதல் நியமனத்தின் போது தான் சேவை புரிய விரும்பும் ஐந்து தேர்தல் தொகுதிகளை, விருப்பக் கிரமப்படி, விண்ணப்பப் படிவத்தின் 13 ம் இலக்கக் கூட்டில் குறிப்பிட வேண்டும். பின்வரும் தேர்தல் தொகுதிகளில் எவ்வைந்தேயேனும் தெரிவு செய்யப்படலாம்.

**சிங்கள மொழி மூலப் பாடசாலைகளிலுள்ள வெற்றிடங்கள்**

| தேர்தல் தொகுதி | கல்வி மாவட்டம் |
|---|---|
| (1) கினிதும .. | .. காலி மாவட்டம் |
| (2) கக்மான | மாத்தறை மாவட்டம் |
| (3) தெனியாய | |
| (4) திசமாறம | தங்காலை மாவட்டம் |
| (5) முல்கிறிகல | |
| (6) கேகாலை | கேகாலை மாவட்டம் |
| (7) மாவனெல்லை | |
| (8) எட்டியாந்தோட்ட | |
| (9) டெகியோவிற்ற | |
| (10) றம்புக்கண | |
| (11) மினிப்பே | கண்டி மாவட்டம் |
| (12) தெல்தெனியா | |
| (13) லக்கல .. | .. மாத்தளை மாவட்டம் |
| (14) மகியங்கனை | பண்டாரவளை மாவட்டம் |
| (15) பசறை .. | |
| (16) சொறணதோட்ட | |
| (17) கங்குறங்கெற்ற | நுவரேலியா மாவட்டம் |
| (18) கொத்மலே | |
| (19) பிபிலை .. | மொனறுகலை மாவட்டம் |
| (20) மொனறுகலை | |
| (21) பலாங்கொட | இரத்தினபுரி மாவட்டம் |
| (22) கொலன்ன | |
| (23) கலவான | |
| (24) றக்வான | |
| (25) கட்டுகம்பொல | குருணகல் மாவட்டம் |
| (26) யாப்பகுவ | |
| (27) சிறியல | |
| (28) வாறியப்பொல | |
| (29) தொடங்கஸ்லந்த | |
| (30) சிலாபம் | சிலாப மாவட்டம் |
| (31) புத்தளம் | |
| (32) பிங்கிறிய | |
| (33) நிக்கவரெட்டியா | |
| (34) அனுராதபுரம் | அனுராதபுர மாவட்டம் |
| (35) கொறப்பத்தான் | |
| (36) கெக்கிராவ | |
| (37) கலாவேவ | |
| (38) மிகிந்தலை | |
| (39) மதவாச்சிய | |
| (40) பொலன்னறுவ | பொலன்னறுவ மாவட்டம் |
| (41) மின்னேறியா | |
| (42) அம்பாறை | .. அம்பாறை மாவட்டம் |
| (43) புலத்சிங்கள | களுத்துறை மர்வட்டம் |
| (44) அகலவத்தை | |
| (45) கல்முனை | .. கல்முனை மாவட்டம் |

**தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் தமிழ் அபேட்சகர்களுக்கான வெற்றிடங்கள்**

| தேர்தல் தொகுதி | கல்வி மாவட்டம் |
|---|---|
| (1) கல்குடா .. | .. மட்டக்களப்பு மாவட்டம் |
| (2) மூதூர் .. | .. திருகோணமலை மாவட்டம் |
| (3) ஊர்காவத்துறை | யாழ்ப்பாண மாவட்டம் |
| (4) வட்டுக்கோட்டை | |
| (5) உடுவில் | |
| (6) உடுப்பிட்டி | |
| (7) நல்லூர் | |
| (8) கிளிநொச்சி | |
| (9) மன்னார் | .. மன்னார் மாவட்டம் |
| (10) வவுனியா | .. வவுனியா ம்ாவட்டம் |
| (11) நுவரேலியா | நுவரேலியா மாவட்டம் |
| (12) மஸ்கெலியா | |
| (13) கொத்மலே | |
| (14) வலப்பன | |
| (15) வெலிமட | |
| (16) ஹாவா-பரணகம | |
| (17) பண்டாரவளை | பண்டாரவளை மாவட்டம் |
| (18) கப்புத்தளை | |
| (19) பசறை .. | |
| (20) பதுளை .. | |
| (21) பிபிலை .. | .. மொனறுகலை மாவட்டம் |
| (22) கல்முனை | ... கல்முனை மாவட்டம் |

**தமிழ் மொபி மூலப் பாடசாலைகளில் முஸ்லிம் அபேட்சகர்களுக்கான வெற்றிடங்கள்**

| தேர்தல் தொகுதி | கல்வி மாவட்டம் |
|---|---|
| (1) மன்னார் | .. மன்னார் மாவட்டம் |
| (2) மூதூர் .. | .. திருகோணமலை மர்வட்டம் |
| (3) கல்குடா .. | மட்டக்களப்பு மாவட்டம் |
| (4) மட்டக்களப்பு | |
| (5) பொலன்னறுவ | .. பொலன்னறுவ மாவட்டம் |
| (6) கெக்கிராவ | அனுராதபுர மாவட்டம் |
| (7) கொறப்பத்தான | |
| (8) மதவாச்சிய | |
| (9) அனுராதபுரம் | |
| (10) மிகிந்தலை | |
| (11) புத்தளம் | .. சிலாப மாவட்டம் |
| (12) கல்முனை | .. கல்முனை மாவட்டம் |

**4. இப்பதவிக்கு வேண்டிய கல்வித் தராதரப் பத்திரக்கள்.—**

(i) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (ஆங்கில மொழி மூலம்).

(ii) கேம்பிறிட்ஜ் சிரேட்ட தராதரப் பத்திரம்.

(iii) லண்டன் மற்றிக்குலேசன் தராதரப் பத்திரம்.

(iv) க. பொ. த. (சாதாரண தர—ஆங்கில மொழி மூலப்) பத்திரப் பரீட்சையில் ஒரே தடவையில் சிங்களம்/தமிழ், எண்கணிதம்/ஆரம்ப கணிதம்/வர்த்தக என் கணிதம்/கணிதம், ஆங்கில மொழி ஆகியவை உட்பட ஆறு பாடங்களில் சித்தி.

(v) க. பொ. த. (சாதாரண தர) பத்திரப் பரீட்சையில், இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி சிங்களம்/தமிழ், எண்கணிதம்/ஆரம்ப கணிதம்/வர்த்தக கணிதம்/கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியும் ஆங்கில மொழியில் " அ " ஆம் பாடத்திட்டத்தில் திறமைச் சித்தி அல்லது ஆங்கில மொழி " ஆ " ஆம் பாடத்திட்டத்தில் விசேட சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தி.

(vi) க. பொ. த. (சாதாரண தர) பத்திரப் பரீட்சையில், இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி சிங்களம்/தமிழ், எண்கணிதம்/வர்த்தக கணிதம்/ஆரம்ப கணிதம்/கணிதம், ஆங்கில இலக்கியம் ஆகிய பாடங்களில் சித்தியும் ஆங்கில மொழியின் " அ " ஆம் பாடத்திட்டத்தில் சித்தி அல்லது ஆங்கில மொழியில் " ஆ " ஆம் பாடத்திட்டத்தில் திறமைச் சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தி.

**5. தகவுத்திறன்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(1) 4 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமையைப் பெற்றிருக்க வேண்டும்

(2) 1968 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும்.

(3) சிறந்த நல்லொழுக்கம் உடையவராய் இருக்க வேண்டும்.

(4) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

**6. நியமன நியதிகள்.—**

(i) இப்பதவிகள் தற்காலிகமானவையும் இளைப்பாற்றுச் சம்பள உரித்தற்றனவையுமாகும். கஷ்ட பகுதிகளுக்கென நியமிக்கப்படும் ஆங்கில ஆசிரியர்கள் அவர்கள் தெரிவு செய்யப்படும் தேர்தல் தொகுதிகளில் மாத்திரமே சேவை புரிவர்.

(ii) கஷ்ட பகுதிகளுக்கென நியமிக்கப்படும் ஆங்கில ஆசிரியர்கள் ஆங்கில ஆசிரியர்களுக்கான பரீட்சையில் அல்லது ஆசிரியர் கலாசாலை (ஆங்கில மொழி மூலப்) புகுமுகப் பரீட்சையில் அல்லது நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஆசிரியராகும் பொருட்டு ஆங்கில ஆசிரியர்க்கான வேறு யாதேனும் பரீட்சையில் சித்தியடையத் தவறினால் அவர்கள் நியமிக்கப்படும் தேர்தல் தொகுதிக்கு வெளியே மாற்றப்படுதற்கு உரித்துடையராகார்.

(iii) கஷ்ட பகுதிகளுக்கென நியமிக்கப்படும் ஆங்கில ஆசிரியர் ஒருவர் வேலையிலும் ஒழுக்கத்திலும் திருப்தியற்றவராகக் காணப்படின் முன்னறிவித்தலின்றி சேவையிலிருந்து எந்நேரத்திலேனும் விலக்கப்படுதற்குப் பாத்திரராவார்.

(iv) கஷ்ட பகுதிகளுக்கென நியமிக்கப்படும் ஆங்கில ஆசிரியருக்கு மாதாந்தம் ரூபா 150 சகாயப்படியாக வழங்கப்படும். திறைசேரியால் அங்கீகரிக்கப்படும் யாதேனும் விசேட சகாயப்படியைத் தவிர்ந்த வேறு எவ்வித சம்பளமும் அவருக்குக் கொடுபடாது.

(v) தெரிவு செய்யப்படும் நியமதாரிகள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நடைமுறையில் கொண்டுவருதற்கு, குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தும் பொருட்டு, ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கும் அமைய வேண்டும்.

7. பின்வரும் சாதனங்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பப்பட வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்.

(ஆ) கல்வித் தராதரப் பத்திரங்கள்.

(இ) இரு குணச் சான்றிதழ்கள் ; இவற்றுள் ஒன்று உரிய பகுதிக் காரியாதிகாரியிடமிருந்து பெறப்பட்டதாக இருக்க வேண்டும்.

8. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களைத் தாம் சேவை புரியும் பகுதித் தலைவர் மூலம் அனுப்ப வேண்டும். ஆசிரியர்களும் மாணவ ஆசிரியர்களும் தங்கள் விண்ணப்பங்களை பாடசாலைத் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும்.

9. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான எத்தகைய கடிதங்களும் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கே அனுப்பப்பட வேண்டும். அவைகள் அமைச்சிலுள்ள எவ்வுத்தியோகத்தரின் பெயருக்கும் அனுப்பப்படலாகா.

10. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்தற்கான கடைசித் திகதிக்குப்பின் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அஞ்சல்மூலம் அனுப்புவதால் ஏற்படக்கூடிய தாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளுமுகமாக விண்ணப்பங்களை நேரகாலத்துடன் பதிவு அஞ்சல் மூலம் அனுப்புமாறு விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை கூறப்படுகிறது.

டி. ஜி. தயாரட்ண,
நிரந்தரக் காரியதரிசியும் மகா வித்தியாதிபதியும்.

இல. பா. நி/18/425,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ௵ ஜனவரி ௴ 16 ந் உ.

**(மாதிரி விண்ணப்பப் படிவம்)**

கஷ்ட பகுதிகளுக்கான ஆங்கில ஆசிரியர் பதவி

1. முழுப்பெயர் (சொந்தப் பெயர் முதலில்) :————.
(தெளிவாக எழுதவும்)

2. விலாசம் :————.

3. பால் :————. விவாகம் செய்தவரா, செய்யாதவரா ? :————.

4. பிறந்த இடமும் திகதியும் :————.
14.2.69 அன்றுள்ளபடி வயது :————.

5. (அ) விண்ணப்பதாரியின் தகப்பனின் முழுப்பெயர் :————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் பிறந்த இடம் :————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் பிறந்த இடம் :—
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் பிறந்த இடம் :—.

6. சாதியம் :————.

7. இலங்கைப் பிரசையா ? :————.
வம்சாவழி காரணமாகவா? பதிவு காரணமாகவா ? :————.

8. விண்ணப்பதாரி அரசினர் சேவையில் இருந்தவராயின் பின்வரும் விபரங்களைக் கொடுக்க :—
(1) பகுதிப் பெயர் :————.
(2) வகித்த பதவி :————.
(3) நியமனத் திகதி :————.
(4) விலகிய திகதியும் விலகியதற்கான காரணங்களும் :————.
(5) ஆசிரியராயின் பதிவிலக்கமும் கடைசியாகச் சேவை புரிந்த பாடசாலையும் :————.

9. தற்போது உத்தியோகத்திலிருப்பின், சேவை பற்றிய விபரங்களைக் கீழே கொடுக்க :—
(1) வேலை செய்யும் இடம் :————.
(2) தற்போது வகிக்கும் பதவி :————.
(3) நியமனத் திகதி :————.
(4) மாணவ ஆசிரியராயின், நியமிக்கப்பட்டுள்ள மாவட்டம் :————.

10. வர்த்தமானி அறிவித்தலின் 4 ம் பிரிவின் உட்-பிரிவுகளில் (பதவிக்கு வேண்டிய கல்வித் தராதரப் பத்திரங்கள்) எதற்கமைய நீர் விண்ணப்பித்தற்கு உரித்துடையவரெனக் குறிப்பிடுக. கல்வித் தராதரப் பத்திரத்தின் உண்மைப் பிரதி இணைக்கப்பட வேண்டும் :————.

11. சிங்கள/தமிழ் மொழியில் பெற்றுள்ள தேர்ச்சி :————.

12. உயர் தொழிற் தகைமைகள், யாதேனும் இருப்பின் :————.

13. தெரிவு செய்யப்படின், வர்த்தமானி அறிவித்தலின் 3 ம் பந்தியில் கொடுபட்டுள்ள தேர்தல் தொகுதிகளுள் உமது முதல் நியமனத்தை விரும்பும் யாதேனும் ஐந்து தேர்தல் தொகுதிகளை, விருப்ப ஒழுங்கின் பிரகாரம் குறிப்பிடவும் :—
(1)
(2)
(3)
(4)
(5)

14. குணச்சான்றிதழ்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் விலாசங்களும் :————.
(1)
(2)

மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் என உறுதி அளிக்கின்றேன். அரசினர் சேவையிலிருந்து நான் விலக்கப்படவேனும் பதவியிலிருந்து நானாக விலகியதாக என்மீது நடவடிக்கை எடுக்கப்படவேனும் இல்லை என்றும் வம்சாவழி/பதிவு காரணமாக நான் ஓர் இலங்கைப் பிரசை என்றும் இத்தீவின் எப்பகுதியிலும் சேவை புரிதற்கு ஆயத்தமாயிருக்கிறேன் என்றும் மேலும் உறுதியளிக்கின்றேன். இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவையெனக் காணப்படின், நியமனத்துக்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்தின் பின்னராயின் சேவையிலிருந்து விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் எனவும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

1-974—24.1.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,838

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### ஆங்கில உதவி ஆசிரியர்களின் ஆட்சேர்ப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் தொகுதிகளிலுள்ள அரசினர் பாடசாலைகளிலுள்ள ஆங்கில உதவி ஆசிரியர் பதவிகளுக்குக் கீழே கொடுபட்டுள்ள கல்வித் தராதரப் பத்திரங்களில் யாதேனும் ஒன்றைப் பெற்றுள்ள இரு பாலேயும் (ஆண், பெண்) சேர்ந்த அபேட்சகர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு கொழும்பு 2, மலாய் வீதி, கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (பாடசாலை நிர்வாகக் கிளைக்கு) 1969 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " ஆங்கில உதவி ஆசிரியர்க்கான விண்ணப்பம் " என தெளிவாக அடையாளமிடப்பட வேண்டும்.

3. விண்ணப்பதாரி, தெரிவு செய்யப்படின், முதல் நியமனத்தின் போது தான் புரிய விரும்பும் ஐந்து தேர்தல் தொகுதிகளை, விருப்பக் கிரமப்படி, விண்ணப்பப் படிவத்தின் 13 ம் இலக்கக்கூட்டில் குறிப்பிட வேண்டும். பின்வரும் தேர்தல் தொகுதிகளில் எவ்வைந்தேனும் தெரிவு செய்யப்படலாம்.

#### சிங்கள மொழி மூலப் பாடசாலைகளிலுள்ள வெற்றிடங்கள்

| தேர்தல் தொகுதி | கல்வி மாவட்டம் |
|---|---|
| பெந்தர எல்பிட்டிய, கினிதும | காலி மாவட்டம் |
| தெவிநுவர, கக்மான, கம்புறுப்பிற்றிய, அக்குரெஸ்ஸ, தெனியாய | மாத்தறை மாவட்டம் |
| பெலியத்த, திசமாறம, முல்கிறிகல | தங்காலை மாவட்டம் |
| கேகாலை, டெடிகம, கலிகமுவ, மாவனெல்ல, எட்டியாந்தோட்ட, றுவான்வெல, டெகியோவிற்ற, றம்புக்கண | கேகாலை மாவட்டம் |
| மினிப்பே, நாவலப்பிட்டிய, கம்பொல, கேவகெற்ற, தெல்தெனிய, கலகெதர | கண்டி மாவட்டம் |
| லக்கல .. | .. மாத்தளை மாவட்டம் |
| மகியங்கன, பசறை, சொறணதோட்ட, கப்புத்தளை | பண்டாரவளை மாவட்டம் |
| ஹேவா பறணகம, மஸ்கெலியா, கங்குறன்கெற்ற, கொத்மலை, வலப்பன | நுவரேலியா மாவட்டம் |
| வெலிமட, பிபிலை, மொனருகலை, பலாங்கொட | மொனருகலை மாவட்டம் |
| கொலன்ன, கலவான, றக்வான, பெல்மதுல்ல, இரத்தினபுரி, நிவிற்றிகல | இரத்தினபுரி மாவட்டம் |
| குளியாப்பிட்டியா, பொல்ககாவல, கட்டுகம்பொல, யாப்பகுவ, வாரியப்பொல, கிறியல, தொடங்கஸ்லந்த | குருநாகல் மாவட்டம் |

| தேர்தல் தொகுதி | கல்வி மாவட்டம் |
|---|---|
| சிலாபம், புத்தளம், பிங்கிரியா, நிக்கவரெட்டிய | சிலாபம் மாவட்டம் |
| அனுராதபுரம், கொறப்பொத்தான, கெக்கிராவ, காலவேவ, மிகிந்தலை, மதவாச்சிய | அனுராதபுர மாவட்டம் |
| பொலன்னறுவ, மின்னேரியா | பொலன்னறுவ மாவட்டம் |
| அம்பாறை .. | .. அம்பாறை மாவட்டம் |
| திருகோணமலை, மூதூர் | திருகோணமலை மாவட்டம் |
| புலத்சிங்கள, அகலவத்தை | களுத்துறை மாவட்டம் |

#### தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் தமிழ் அபேட்சகர்களுக்கான வெற்றிடங்கள்

| தேர்தல் தொகுதி | கல்வி மாவட்டம் |
|---|---|
| கல்குடா, பட்டிருப்பு | மட்டக்களப்பு மாவட்டம் |
| மூதூர் .. | .. திருகோணமலை மாவட்டம் |
| ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, உடுவில், சாவகச்சேரி, உடுப்பிட்டி, கோப்பாய், நல்லூர், கிளிநொச்சி | யாழ்ப்பாண மாவட்டம் |
| மன்னார் .. | .. மன்னார் மாவட்டம் |

#### தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் முஸ்லிம் அபேட்சகர்களுக்கான வெற்றிடங்கள்

| தேர்தல் தொகுதி | கல்வி மாவட்டம் |
|---|---|
| மன்னார் .. | .. மன்னார் மாவட்டம் |
| மூதூர் .. | .. திருகோணமலை மாவட்டம் |
| கல்குடா, மட்டக்களப்பு | மட்டக்களப்பு மாவட்டம் |
| பொலன்னறுவ .. | .. பொலன்னறுவ மாவட்டம் |
| கெக்கிராவ, கொறவப்பொத்தான, மதவாச்சி, அனுராதபுரம், மிகிந்தலை | அனுராதபுர மாவட்டம் |
| புத்தளம், பிங்கிறிய | சிலாப மாவட்டம் |

4. இப்பதவிகளுக்கு வேண்டிய கல்வித் தராதரப் பத்திரங்கள்

(i) பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர் தராதரப் பத்திரம் (I ம் அல்லது II ம் வகுப்பு).

(ii) ஆங்கில ஆசிரியர் தராதரப் பத்திரம் (I ம் அல்லது II ம் அல்லது III ம் வகுப்பு).

(iii) ஆங்கில உதவி ஆசிரியர் தராதரப் பத்திரம்.

(iv) லண்டன் இடைமானித் தராதரப் பத்திரம் (ஆங்கில மொழி மூலம்) (ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டு) / பொதுக் கலைத் தகைமைத் தராதரப் பத்திரம் (ஆங்கில மொழி மூலம்) (ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டு) / கலைப் பரீட்சையில் முதற் பரீட்சைப் பத்திரம் (ஆங்கில மொழி மூலம் (ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டு).

(v) (அ) லண்டன் க. பொ. த. (உயர்தர) பத்திரம் (ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டு).

(ஆ) இலங்கை க. பொ. த. (உயர்தர) பத்திரம் (ஆங்கில மொழி மூலம்) (ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டு).

(இ) இலங்கை உ. பா. த. பத்திரம் (ஆங்கில மொழி மூலம்) (ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டு (மொழித் தகைமைக்கான ஆங்கில வினுப் பத்திரத்தில் அல்லது விசேட வினுப் பத்திரத்தில் அல்லது பரீட்சையின் 1 ம் பகுதியில் பெறும் சித்தி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

5. **சம்பளமும் சகாயப்படிகளும்.**—

(i) பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றவர்களுக்கும் (1 ம் அல்லது 2 ம் வகுப்பு).—

(அ) 1 ம் வகுப்பு—ரூபா 2,220—14 × 120, 4 × 180—4,620.

(ஆ) 2 ம் வகுப்பு—ரூபா 1,860—2 × 120—2,100.

(ii) ஆங்கில ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றவர்களுக்கு (1 ம் அல்லது 2 ம் அல்லது 3 ம் வகுப்பு).—

(அ) 1 ம் வகுப்பு—ரூபா 1,632—9 × 72, 6 × 120—3,000.

(ஆ) 2 ம் வகுப்பு—ரூபா 1,272—4 × 72—1,560.

(இ) 3 ம் வகுப்பு—ரூபா 1,056—2 × 72—1,200.

(iii) ஆங்கில உதவி ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றவர்களுக்கு—ரூபா 768—2 × 30—5 × 36—12 × 42—ரூபா 1,512 (ரூபா 864, ரூபா 1,050 வருடாந்தச் சம்பளங்களில் வினைத்திறமைகாண் தடைகள் உண்டு).

(iv) லண்டன் இடைமானித் தராதரப் பத்திரம்/பொதுக் கலைத் தகைமைத் தராதரப் பத்திரம் (ஆங்கில மொழி மூலம்)/கலைப் பரீட்சையில் முதற் பரீட்சைப் பத்திரம் (ஆங்கில மொழி மூலம்) பெற்றவர்களுக்கு

ரூபா 1,344—18 × 72—3 × 120—3,000.

(v) (அ) லண்டன் க. பொ. த. (உயர்தர) பத்திரம் பெற்றவர்களுக்கு.

(ஆ) இலங்கை க. பொ. த (உயர்தர) பத்திரம் (ஆங்கில மொழி மூலம்) (ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டு)—பெற்றவர்களுக்கு.

(இ) இலங்கை உ. பா. த. பத்திரம் (ஆங்கில மொழி மூலம்), (ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டு)—பெற்றவர்களுக்கு.

(அ) ரூபா 798 (மாறுத சம்பளம்).

(ஆ) ரூபா 798 (மாறுத சம்பளம்).

(இ) ரூபா 798 (மாறுத சம்பளம்).

சீவன சகாயப்படி, விசேட சீவன சகாயப்படி, வாடகைப்படி ஆகியவை விதிக்கப்பட்ட விகிதங்களின் பிரகாரம் கொடுபடும்.

6. **தகவுத்திறன்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாக திருப்திகரமான சான்று காட்டவேண்டும் :

(அ) 4 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள கல்வித் தராதரப் பத்திரம் யாதேனும் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) 1969 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் பாடசாலைகளில் சேவை புரியும் ஆசிரியர்களுக்கும் தனிப்பட்ட பாடசாலைகளில் சேவை புரிபவர்களும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையவர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களுமான ஆசிரியர்களுக்கும் அமையாது).

(இ) சிறந்த நல்லொழுக்கம் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஈ) இத்தீவின் எப்பகுதியிலும் சேவை புரிய ஆயத்தமாயிருப்பதுடன் அதற்கான உடல் தகுதியுடையவராயும் இருக்க வேண்டும்.

(உ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

7. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும்.

(ii) நியமதாரி ஒவ்வொருவரும் பாடசாலை ஆசிரியர் சம்பள இளைப்பாற்று விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். நியமனம் பெறும் ஆண்கள் ஆசிரியர் விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கும் கட்டணம் செலுத்த வேண்டும்.

(iii) நியமதாரிகள் ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான சேவையில் இல்லாவிடின் மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார்கள். ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான சேவையிலுள்ள நியமதாரிகள் ஒரு வருட காலத்துக்கு பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்கள்.

(iv) தெரிவு செய்யப்படும் நியமதாரி இத்தீவின் எப்பகுதியிலும் கடமைபுரிய வேண்டும்.

(v) தெரிவு செய்யப்படும் நியமதாரிகள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நடைமுறையில் கொண்டுவருதற்கு, குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தும் பொருட்டு, ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் இனிமேல் ஆக்கப்படும் விதிகளுக்கும் அமைய வேண்டும்.

8. பின்வரும் சாதனங்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுப் பத்திரம் ;

(ஆ) ஆங்கில மொழி மூலம் பெற்றுள்ள ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம் அல்லது உயர்தொழிற் தராதரப் பத்திரம் ;

(இ) இரு குணச்சான்றிதழ்கள் ; இவற்றில் ஒன்று உரிய பகுதிக் காரியாதிகாரியிடமிருந்து பெறப்பட்டதாக இருக்க வேண்டும்.

9. அரசினர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்கள் கடமை புரியும் பகுதித் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். சேவையிலுள்ள ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் பாடசாலைத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

10. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான எத்தகைய கடிதங்களும் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கே அனுப்பப்பட வேண்டும். அவைகள் அமைச்சிலுள்ள எவ்வுத்தியோகத்தரின் பெயருக்கும் அனுப்பப்படலாகா.

11. அரசினர் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையும் இவ்வர்த்தமானியின் I ம் பகுதி II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளனவையுமான பொது நிபந்தனைகளுக்கும் உங்கள் கவனம் கோரப்படுகிறது.

12. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்தற்கான கடைசித் திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. அஞ்சல் மூலம் அனுப்புவதால் ஏற்படக்கூடிய தாமதத்தை தவிர்த்துக் கொள்ளுமுகமாக விண்ணப்பங்களை நேரகாலத்துடன் பதிவு அஞ்சல் மூலம் அனுப்புமாறு விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை கூறப்படுகிறது.

டி. ஜீ. தயாரட்ண,
நிரந்தரக் காரியதரிசியும்
மகா வித்தியாதிபதியும்.

இல. பா. நி/12/267,
பாடசாலைகள் நிர்வாகக் கிளை,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு ஜனவரி மீ 16 ந் உ.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### ஆங்கில உதவி ஆசிரியர்களுக்கான பதவிகள்

1. முழுப்பெயர் (சொந்தப் பெயர் முதலில்) : ————.
(தெளிவாக எழுதவும்)

2. விலாசம் : ————.

3. பால் : ————. விவாகம் செய்தவரா, செய்யாதவரா ? :————

4. பிறந்த இடமும் திகதியும் : ————.
14.2.1969 அன்றுள்ளபடி வயது : ————.

5. (அ) விண்ணப்பதாரியின் தகப்பனின் முழுப்பெயர் : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் பிறந்த இடம் : ————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் பிறந்த இடம் : ————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் பிறந்த இடம் : ————.

6. சாதியம் : ————.

7. இலங்கைப் பிரசையா ? : ————.
வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா : ————.

8. விண்ணப்பதாரி அரசினர் சேவையில் இருந்தவராயின் பின்வரும் விபரங்களைக் கொடுக்க :—
(i) பகுதிப் பெயர் : ————.
(ii) வகித்த பதவி : ————.
(iii) நியமனத் திகதி : ————.
(iv) விலகிய திகதியும் விலகியதற்கான காரணங்களும் : ————.
(v) ஆசிரியராயின் பதிவிலக்கமும் கடைசியாகச் சேவை புரிந்த பாடசாலையும் : ————.

9. தற்போது உத்தியோகத்திலிருப்பின், சேவை பற்றிய விபரங்களைக் கீழே கொடுக்க : ————.
(i) வேலை செய்யுமிடம் : ————.
(ii) தற்போது வகிக்கும் பதவி : ————.
(iii) நியமனத் திகதி : ————.

10. வர்த்தமானி அறிவித்தலின் 4 ம் பிரிவின் உட்பிரிவுகளினுள் (பதவிக்கு வேண்டிய கல்வித் தராதரப் பத்திரங்கள்) எதற்கமைய நீர் விண்ணப்பித்தற்கு உரித்துடையவரெனக் குறிப்பிடுக. கல்வித் தராதரப் பத்திரத்தின் உண்மைப் பிரதி இணைக்கப்பட வேண்டும் : ————.

11. சிங்கள/தமிழ் மொழியில் பெற்றுள்ள தேர்ச்சி : ————.

12. உயர் தொழிற் தகைமைகள் யாதேனும் இருப்பின் : ————.

13. தெரிவு செய்யப்படின், வர்த்தமானி அறிவித்தலின் 3 ம் பந்தியில் கொடுபட்டுள்ள தேர்தல் தொகுதிகளுள் உமது முதல் நியமனத்தை விரும்பும் யாதேனும் ஐந்து தேர்தல் தொகுதிகளை விருப்ப ஒழுங்கின் பிரகாரம் குறிப்பிடவும்:—
   (1) ————.
   (2) ————.
   (3) ————.
   (4) ————.
   (5) ————.

14. குணச்சான்றிதழ்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் விலாசங்களும் :—
   (1) ————.
   (2) ————.

மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென உறுதி அளிக்கின்றேன். அரசினர் சேவையிலிருந்து நான் விலக்கப்படவேனும் பதவியிலிருந்து நானாக விலகியதாக என்மீது நடவடிக்கை எடுக்கப்படவேனும் இல்லை என்றும் வம்சாவழி பதிவு காரணமாக நான் ஓர் இலங்கைப் பிரசை என்றும் இத்தீவின் எப்பகுதியிலும் சேவை புரிதற்கு ஆயத்தமாயிருக்கிறேன் என்றும் மேலும் உறுதியளிக்கின்றேன். இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை யெனக் காணப்படின், நியமனத்துக்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும், நியமனத்தின் பின்னராயின் சேவையிலிருந்து விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் எனவும் அறிவேன்.

————
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

1-971—24.1.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,838.

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும்

## நொத்தாரிசு பிரதம பரீட்சை—1968 ஜூலை மாதம்

1968 ம் ஆண்டு ஜூலை மாதம் 1 ம் திகதி நடாத்தப்பட்ட நொத்தாரிசு பிரதம பரீட்சை முடிவின் பிரகாரம் நொத்தாரிசு உடன்படிக்கைப் பட்ட லிகிதர்களாக அனுமதிக்கப்படுவதற்கு கீழேகுறிக்கப்பட்டிருக்கும் நொத்தாரிசு லிகிதர்களையும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது.

| குத்து இல. | விண்ணப்பகாரரின் பெயர் | பயிற்சிபெற எண்ணும் பாஷை |
|---|---|---|
| 1 | அம்பதெனிய, ஏ. டீ. | சிங்களம் |
| 6 | அபயசிங்க, டீ. ஈ. என். | ஷை |
| 17 | அலெக்ஸாண்டர், ஏ. பி. ஏ. | ஷை |
| 18 | அல்கம, டீ. டப்ளியூ. பி. | ஷை |
| 38 | ஆரியதாச, ஜீ. | ஷை |
| 39 | ஆரியதாச, கே. | ஷை |
| *47 | பாலமஹத்மயா, ஜே. எம். | ஷை |
| 64 | சந்திரலதா, ஏ. பீ. | ஷை |
| *78 | சந்தரவஸ்து பண்டார, எஸ். எம். | ஷை |
| 84 | சார்ள்ஸ் சிங்ஞோ, பி. | ஷை |
| *86 | சிரில், பி. கே. ஜே. | ஷை |
| 101 | தயாவதி, எம். டபிள்யு. | ஷை |
| 104 | டீ சில்வா, கே. டீ. | ஷை |
| *109 | தனபால, எஸ். எம். | ஷை |
| 118 | தர்மவர்தன, டபிள்யு. எஸ். | ஷை |
| 119 | தர்மவன்ச, எஸ். ஆர். | ஷை |
| *121 | டயஸ், பி. ஜி. சிரில் | ஷை |
| 126 | தொன்தீனு, டபிள்யு. எல். | ஷை |
| 131 | எதிரிசிங்க, டீ. ஜே. | ஷை |
| 135 | ஏகநாயக, ஈ. ஏ. எஸ். | ஷை |
| 145 | பெர்ணாண்டு, எ. எம். | ஷை |
| 158 | பெர்ணாண்டு, டபிள்யு. ஏ. | ஷை |
| 161 | பொன்சேகா, பி. டீ. ஆர். சி. | ஷை |
| 178 | குணதாச, எம். டீ. ஏ. | ஷை |
| 180 | குணபால, கே. டீ. | ஷை |
| *186 | குணரத்ஹாமி, யூ. எல். | ஷை |
| 194 | குணசேகர, எச். எம். ஜே. | ஷை |
| *203 | குணதுங்க, ஈ. பி. | ஷை |
| *228 | ஹெட்டிஆரச்சி, எச். ஏ. | ஷை |
| *239 | ஜயகொடி, ஜே. ஏ. | ஷை |
| 243 | ஜயமான்ன, எஸ். | ஷை |
| 251 | ஜயசிங்க, டீ. | ஷை |
| 263 | ஜயதிலக, கே. ஜே. பி. டபிள்யு. | ஷை |
| 268 | ஜயவர்தன, என். டீ. ஜி. | ஷை |
| 277 | ஜினவரதாச, எம். ஏ. டீ. | ஷை |
| 284 | கஸ்தோா, ஆர். கே. ஆர். எப். என். டபிள்யு | ஷை |
| *285 | கலுஆராச்சி, டபிள்யு. | ஷை |
| *294 | கருணாஜீவ, டபிள்யு. பி. எம். | ஷை |
| 325 | குமாரரத்ன, எம். கே. எஸ். பி. | ஷை |
| 331 | குசுமாவதி, கே. பி. கே. | ஷை |
| *335 | லெண்டிஸ் அபேதீர, ஏ. | ஷை |
| *365 | மெண்டிஸ், டபிள்யு. ஜே. | ஷை |
| 384 | நாணயக்கார, எச். பீ. பி. | ஷை |
| 388 | நவரத்ன, டீ. எச். | ஷை |
| 390 | நிமலரத்ன, எச். எ. பி. | ஷை |
| 399 | பதிராஜ, பி. எம். டி. | சிங்களம் |
| 406 | பெரேரா, பீ. எஸ். | ஷை |
| 415 | பெரேரா, எம். எஸ். | ஷை |
| 432 | பீரிஸ், கே. எம். டீ. | ஷை |
| 445 | பியதாச, என். ஏ. டீ. | ஷை |
| *446 | பியதாச, பி. வி. | ஷை |
| 449 | பியசீலி, எம். டீ. | ஷை |
| 452 | பியசேன, ஜீ. டீ. | ஷை |
| 461 | பொன்வீர, ஜே. பி. | ஷை |
| 467 | பிரேமலதா, வை. ஆர். ஏ. | ஷை |
| 469 | பிரேமரத்ன, ஜீ. | ஷை |
| 479 | புஞ்சிசிங்ஞோ, பி. கே. | ஷை |
| 483 | ராஜகருணா, எஸ். | ஷை |
| 485 | ராஜபக்ஸ சமரநாயக, டீ. பி. | ஷை |
| 493 | ரணசிங்க, பீ. | ஷை |
| *497 | ரணசிங்க, ஆர். எம். டி. பீ. | ஷை |
| 513 | ரத்னவதி, யு. | ஷை |
| 518 | சாமவதி, எம். டீ. | ஷை |
| *525 | சமரசேகர, டி. ஆர். | ஷை |
| 527 | சமரசிங்க, ஈ. எல். எம். | ஷை |
| 530 | சமரசுந்தர, எஸ். ஏ. பி. | ஷை |
| 531 | சமரதுங்க, டீ. | ஷை |
| *534 | சமரவீர, டபிள்யு. | ஷை |
| *539 | சபுகொடன, ஏ. | ஷை |
| 551 | சேனாரத்ன, டீ. ஜே. | ஷை |
| 552 | சேனாரத்ன, டீ. எம். | ஷை |
| 553 | சேனாரத்ன, எஸ். டீ. டீ. | ஷை |
| *555 | செனவிரத்ன, ஜே. பி. | ஷை |
| *568 | சில்வா, டபிள்யு. ஏ. ஜே. ஈ. | ஷை |
| 569 | சில்வீனு, டபிள்யு. டீ. | ஷை |
| *571 | சிமியோன் சிங்ஞோ, எஸ். ஏ. | ஷை |
| *572 | சோமசிரி சிரிபால, டீ. டீ. | ஷை |
| 592 | சோமபால, ஆர். டீ. | ஷை |
| 598 | சோமாவதி, ஆர். ஜீ. | ஷை |
| 603 | சுபேஹாமி, ஏ. டபிள்யு. | ஷை |
| 627 | உடுகும்புற, டீ. | ஷை |
| 628 | உடவத்த, டீ. டபிள்யூ. | ஷை |
| 644 | வீரசிங்க, சீ. ஏ. | ஷை |
| 655 | விக்ரமரத்ன, கே. எச். எஸ். | ஷை |
| 673 | விஜேத்ர, ஏ. | ஷை |
| 688 | வில்பர்ட் சில்வா, ஏ. | ஷை |
| 689 | வில்பிரட், டபிள்யு. ஏ. | ஷை |

* நொத்தாரிசு லிகிதர்கள்.

ஆர். சமரசேகர,
பதிவுகாரியகர்த்தர்.

பதிவுகாரியகர்த்தர் காரியாலயம்,
கொழும்பு,
1969 ம் ஆண்டு ஜனவரி மீ 12 ந் உ.

1-830—24.1.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,838

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### மொனருகலை உபபிரிவு

கியுள்வெவ நீர்வடிக்கட்டும் பாதையும் அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் பண்டாரவளையிலுள்ள ஊவாப் பிரிவு பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரால் 26.2.69 புதன் கிழமை காலை 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. ரூபா 30,000/- தொகைக்கு அல்லது அதற்கு மேற்பட்ட நீர்ப்பாசன இலாகாவில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் களும், கிராம முன்னேற்றச் சங்கங்களும், கூட்டுறவுச் சங்கங் களுமே இக் கேள்விப்பத்திரத்தை சமர்ப்பிக்கத் தகுதி யுடையவர்.

3. வெற்றுப் பத்திரங்கள் மொனருகல, பதுளை, மையங்கன நீர்ப்பாசனக் கந்தோர்களில் 1969 ம் ஆண்டு மாசி மாதம் 22 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவு புத்தகத் துடன் தாம் தற்போது திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் முழு விபரங்களையும் அவற்றின் பெறுமதியையும் ஒரு பத்திரத்தில் தெரியப்படுத்தி விண்ணப்பிக்க வேண்டும். கேள்விப்பத்திர கட்டுப்பணம் ரூபா 50/- ஐ ஏதாவது ஒரு கச்சேரியில் அல்லது கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள் ளும் நீர்ப்பாசனக் கந்தோர்களில் செலுத்தி கேள்விப்பத்திரங் களைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. இது சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்களை மொனருகல உப-பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஏ. எப். மஹகமகே,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
மொனருகல உப-பிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்,
மொனருகல,
1969 ம் ஆடு தை மீ 12 ம் வ.

1-902—24.1.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,838

---

## கிராமாபிவிருத்திச் சிறு கைத்தொழில் இலாகா

மேற்படி இலாகாவுக்கு றெயோன் நூல் விநியோகிப்பதற்குரிய கேள்விப்பத்திர முடிவு திகதி 1969 ம் ஆண்டு மாசி மாதம் 25 ம் திகதியாகும். 1969 ம் ஆண்டு தை மாதம் 9 ம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் உள்ளதுபோல் 1969 ம் ஆண்டு சித்திரை மாதம் 17 ம் திகதி அல்ல.

தொடர் இல. டிஎ/டி/25/44(1/69).
கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா,
கொழும்பு 7,
1969, தை 15.

பி. எச். பி. டி சில்வா,
பணிப்பாளர்,
கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா.

1-900—24.1.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,838

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### மாத்தளை உபபிரிவு

மாத்தளை நீர்ப்பாசன உப பிரிவிலுள்ள கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்களை நத்தாராம்பொத்த, குண்டசாலையில் உள்ள மத்திய மாகாண பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளரினால் 1969 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ம் திகதி முற்பகல் 10 மணிவரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அதன்பின் உடனே திறக்கப் படும்.

| வேலைகளின் விபரம் | ஒப்பந்தக்காரரின் பதிவுத்தொகை ரூபா | கேள்விக்கட் டணத்தொகை ரூபா |
|---|---|---|
| 1. வெவதென்ன திட்டத்தின் வானும் மதகும் அமைப்பதற்கு .. | 20,000 .. | 25 |
| 2. நூண்தொழில் உதவியாளருக்கா கிய மாத்தளையில் அரசாங்க இல்லம் அமைக்க .. .. | 33,000 .. | 50 |
| 3. நுண்தொழில் உதவியாளருக்கா கிய அரசாங்க இல்லம், டம்புள்ளயில் அமைக்க .. | 33,000 .. | 50 |

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேற் கூறிய தொகைக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களும், கிராம அபிவிருத் திச் சங்கங்களும், கூட்டுறவுச் சங்கங்களும் மட்டுமே கேள்விப்பத்திரங்கள், சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

இக் கேள்விகளுக்கான வெற்றுப்பத்திரங்களை மாத்தளை, கண்டி அசலக்க, நுவரஎலிய ஆகிய இடங்களிலுள்ள நீர்ப்பாசன அலுவலகங் களில், அலுவலக நேரங்களில் 3.2.69 முதல் 11.2.69 வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவு புத்தகங் களுடன் தாம் இப்போது அரசாங்கத்தில் மேற்கொண்டுள்ள வேலை களின் விபரங்களையும், அவற்றின் பெறுமதிகளையும் அவை திருப்திகர மாக நடைபெறுகின்றனவா என்பதை நிரூபிக்க அத்தாட்சிப் பத்திர மொன்றும் பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு வேலைக்கும் நேரே காட்டப்பட்டுள்ள கேள்வி கட்டணத் தொகையை மேற் கூறியுள்ள அலுவலகங்களிலோ அல்லது ஏதாவதொரு கச்சேரியிலோ செலுத்திப் பற்றுச் சீட்டை சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னரே கேள்வி வெற்றுப் பத்திரங்கள் கொடுக்கப்படும். மேற்கூறிய சங்கங்கள் கேள்விக்கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

மேலதிக விபரங்கள் மாத்தளை உபபிரிவு நீர்ப்பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

க. கனகலிங்கம்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
மாத்தளை உபபிரிவு.

இரிகேஷன் கந்தோர்,
மாத்தளை,
13.1.68

1-976—24.1.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,838

---

## கச்சேரி — வவுனியா

### கட்டிட வேலைகள் சம்பந்தமான கேள்விப்பத்திரங்கள்

9.1.69 ம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியில் பிரசுரிக் கப்பட்ட மேற்கூறிய வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் பாரமெடுக்கும் முடிவுத் திகதி 6.2.69 வியாழக்கிழமை நண் பகல் 12 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

கேள்விப்பத்திரங்கள் 5.2.69 பிற்பகல் 3.00 மணிவரை கொடுக்கப்படும்.

பீ. சி. பெரேரா,
அரசாங்க அதிபர்,
வவுனியா மாவட்டம்.

கச்சேரி,
வவுனியா, 15.1.69.

1-884—24.1.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,838

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### வவுனியா உப பிரிவு

கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் வவுனியாவிலுள்ள வடபகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினல் 1969 ம் ஆண்டு மாசி மாதம் 18 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 50,000 க்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையராகிய ஒப்பந்தகாரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மட்டுமே இக் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

| வேலையின் பெயர் | செலுத்த வேண்டிய கேள்விக் கட்டணத் தொகை | இலாகாவினல் கொடுக்கப்படும் பொருட்கள் |
|---|---|---|
| கொத்தன் குளவெட்டு வேலை— | | |
| பகுதி I .. | ரூபா 100 .. | சீமெந்து மாத்திரம் |
| பகுதி II .. | ரூபா 100 .. | — |

இக் கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் கீழ்க்காணும் அலுவலகங்களில் 1969 ம் ஆண்டு மாசி மாதம் 13 ம் திகதி வரையும், அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம் :—

(1) நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், உப–பிரிவு, வவுனியா
(2) நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், வவுனிக்குளம், மாங்குளம்
(3) நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், கிளிநொச்சி
(4) நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், ஒட்டுசுட்டான்
(5) நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், முருங்கன்

கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற் கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும், அவற்றின் பெறுமதிகளையும் ஒரு பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தகாரர்கள் கேள்விப் பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா என்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்கப்படுமுன் மேற்கூறிய நீர்ப்பாசன அலுவலகங்கள் ஏதாவதொன்றில் மேற்கூறிய கட்டணத் தொகை செலுத்தப்பட வேண்டும். அல்லது இக் கட்டணம் ஏதாவதொரு கச்சேரியில் செலுத்தப்பட்டு அதற்கு உரிய பற்றுச்சீட்டுக் காட்டப்பட்டாலும் போதுமானது. இக் கேள்விக் கட்டணம் நீர்ப்பாசன இலாகா அதிபரின் பெயரில் செலுத்தப்பட வேண்டும்.

இந்த வேலைகளுக்கு மேற்குறிப்பிட்டுள்ளபடி சீமெந்து மாத்திரமே இலாகாவினல் கொடுக்கப்படும். வேறெந்தப் பொருட்களோ அல்லது ஆயுதங்களோ கொடுபடமாட்டா.

இக் கேள்வியைப்பற்றிய மேலதிகமான விபரங்களெல்லாவற்றையும் வவுனியா உபபிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சா. ஒ. அ. சோமநாதர்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
வவுனியா உபபிரிவு.

வவுனியா,
1969 ம் ஆண்டு தை மீ 7 ந உ.

1–818—24.1.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,838

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### அம்பாறை உப பகுதி

பின்வரும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் மட்டக்களப்பு பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலார் அவர்களால் 1969 ஆண்டு மாசி மாதம் 18 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் பின்னர் உடனடியாகத்திறக்கப்படும்.

2. அவ்வவ் வேலைக்கு எதிரே காட்டப்பட்டுள்ள அல்லது அவைக்கு மேற்பட்ட தொகைக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதியப்பட்டுள்ள கொந்தராத்துக்காரர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமாபிவிருத்தச் சங்கங்கள் மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகைமையுடையவராவர்.

| வேலை விபரம் | பதிவுத் தொகை ரூபா | கேள்விப் பத்திரக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| அ/ 13/68-69 கல்ஓயா இடதுகையிலுள்ள நாமல்ஓயா சைபனில் சீர்திருத்த வேலைகள் செய்தல் .. | 25,000 .. | 25 |
| அ/ 14/68-69 கல்ஓயா இடதுகரையிலுள்ள 15 ம் வாய்க்காலில் திருத்த வேலை செய்துதரல் .. | 20,000 .. | 25 |

3. கேள்விப் பத்திரங்கள் அம்பாரை, கல்முனை அல்லது செங்கலடி உப நீர்ப்பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1969 ம் ஆண்டு மாசி மாதம் 12 ந திகதி புதன்கிழமை பிற்பகல் 4 மணிவரையும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருபவர் தமது பதிவுப் புத்தகத்துடன் இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலை விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தல் வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர் கேள்விப்பத்திரம் அனுப்பலாமா என்பதை அறிய ஏதுவாய் இருக்கும். வெற்றுப் பத்திரம் வழங்குமுன் மேற்காட்டிய நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஒருவரின் காரியாலயத்திலோ, அல்லது கச்சேரியிலோ. மேற்காட்டிய கேள்விப்பத்திரக் கட்டணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டு காட்டல் வேண்டும்.

4. இக் கேள்விகளுக்கான மேலதிக விபரங்களை அம்பாரை உப நீர்ப்பாசன அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ஜி. எம். சந்ரதாச
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
அம்பாரை உப பிரிவு.

உப நீர்ப்பாசன அலுவலகம்,
அம்பாரை,
7.1.69.

1—812—24.1.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,838

---

## இலங்கை அரச விமானப் படை

இலங்கை அரச விமானப் படையின் சீனன்வாடித் தளத்திலுள்ள விமானம் ஓடி மேலெழும் சாலைக்குத் தாரும் கல்லும் கலந்த கலவையிடுவதற்குக் கேள்விகள், கொழும்பு த. பெ. எண் 594 ஐக் கொண்ட அரச விமானப்படைத் தலைமை நிலையத்திலுள்ள கேள்விச் சபைத் தலைவரால் 1969 பெப்ருவரி 14 ந் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையிலுள்ள இலங்கை விமானப்படைத் தலைமைக் காரியாலயத்திலிருக்கும் பிரதான வேலை உத்தியோகத்தரிடமிருந்து இதுபற்றிய சகல விபரங்களையும் பெற்றுக்கொள்வதோடு அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களிலேயே கேள்விகள் இருத்தல் வேண்டும். கேள்விப் படிவங்கள் 1969 பெப்ருவரி 13 ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரை கொடுக்கப்படும். எல்லாக் கேள்விகளும் இரு பிரதிகளாகக் கையொப்பமிட்டு உறைகளிலிட்டு, மெழுகிட்டு அவ்வுறையின் இடதுபுற மேல் மூலையில் "இலங்கை அரச விமானப்படையின் சீனன்வாடித் தளத்திலுள்ள விமானம் ஓடி மேலெழும் சாலைக்குத் தாரும் கல்லும் கலந்த கலவையிடுவதற்குக் கேள்வி" எனக் குறிப்பிட்டு கேள்விச் சபைத் தலைவர், இலங்கை அரச விமானப் படைத் தலைமை நிலயம், த. பெ. எண் 594, கொழும்பு என மூகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும்.

3. 700,000/- ரூபாவிற்குக் குறையாத பெறுமதியான இம் மாதிரி வேலைக்கு அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கொந்தருத்துக்காரர்களே பின்வரும் அத்தாட்சிகளுடன் கேள்விகளை அனுப்பத் தகுதியுடையவர்கள் :—

(அ) பதிவு செய்யப்பட்டதற்கு அத்தாட்சி.

(ஆ) திருப்பிப் பெறக்கூடிய கேள்விக் கட்டுப்பணமான 250/- ரூபாவையும் திருப்பிப் பெறமுடியாத கேள் கேள்விப்பணமான 5/- ரூபாவையும் கட்டியதற்கான பற்றுச்சீட்டுகள்.

4. திருப்பிப் பெறக்கூடிய கேள்விக் கட்டுப்பணம், கட்டுவதிலிருந்து பின்வரும் ஸ்தாபனங்களுக்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது :—

(அ) கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம்.

(ஆ) மற்றைய அரசுகளின் அரசாங்க வர்த்தக நிறுவனங்கள்—உ-ம். சீன தேசிய யந்திர இறக்குமதிக் கூட்டுத்தாபனம்.

(இ) கூட்டுறவுச் சங்கப் பதிவாளரால் அங்கீகரிக்கப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள்.

(ஈ) கூட்டுறவுச் சங்கப் பதிவாளரால் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்.

5. கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையிலுள்ள இலங்கை அரச விமானப் படைத் தலைமை நிலையத்திலிருக்கும் சிவில் பரிபாலன உத்தியோகத்தரும் கணக்காளருமாகக் கடமையாற்றுபவரிடம் கேள்விக் கட்டுப் பணத்தையும், கேள்விப் பணத்தையும் கட்டி அதற்கான பற்றுச்சீட்டையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

எம். எஸ். மாறுப்
ஸ்குவாட்றன் லீடர்,
விமானப் படைத் தலைவருக்காக.

திகதி : 16.1.69.

1-899—24.1.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,838

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### பிரெஞ்சு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட 10 இழு பொறிகளும் இழு வண்டிகளும் விநியோகிப்பதற்கான கேள்விப் பத்திரம்

10 இழு பொறிகளும் இழு வண்டிகளும் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 இல் இருக்கும் காணி அபிவிருத்தித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவரினால் 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 28 ம் திகதி காலை 11 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**விபரக்கூற்று :**

5 இழு பொறிகள்-டீசலில் இயங்கும் சில்லு வகையான, 40-50 குதிரை வேகத்தரமான இழு பொறிகள்.

5. இழு பொறிகள்-டீசலில் இயங்கும் சில்லு வகையான, 60-70 குதிரை வேகத்தரமான இழு பொறிகள்.

10 இழு வண்டிகள்-5 தொன் சுமக்கும் திறனுடைய விவசாயத்திற்கான இழு வண்டிகள்.

2. கொழும்பு 1 இல் இருக்கும் காணி அபிவிருத்தித் திணைக்களத் தலைவரிடமிருந்து 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 25 ம் திகதி நண்பகல் 12 மணிவரை பெறப்படும் கேள்விப்பத்திரப் படிவங்களில் மாத்திரமே கேள்விகள் இரு பிரதிகளில் கோரப்படல் வேண்டும்.

3. 1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 28 ம் திகதி காலை 11 மணிக்கு எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 இல் இருக்கும் காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விகள் விண்ணப்பித்தோர் சமூகமளிக்கலாம்.

4. எவ்வித விசாரணையுமின்றி கேள்விப்பத்திரங்கள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் நிராகரிக்கவோ அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளவோ அரசாங்கம் அதிகாரத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

5. வேறு மேலதிக விபரங்களைக் காணி அபிவிருத்தித் திணைக்களத் தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தித் திணைக்களத் தலைவருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன்-சதுக்கம்,
கொழும்பு,
1969 ம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ம் திகதி.

1-977—24.1.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,838

---

# கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கேள்விகள் முடிபு

பொறித் தொகுதியும், சாதனங்களும் வழங்குவதற்கான கேள்வி—1968

| விடய இலக்கம் | விவரணம் | தொகை | கிடைத்த கேள்விகளின் எண்ணிக்கை | வெற்றிகரமான கேள்விக்காரரின் பெயர் | ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 1. | இழுபொறி (ட்றெக்ரர்) (இலேசானவகை) | 1 | 10 | சி. ஐ. ஏ. எஸ். வரையறுக்கப்பட்டது | 1,13,296 09 |
| 2. | இழுபொறி (ட்றெக்ரர்) (பாரமான வகை) | 1 | 7 | ஷை | 4,18,683 65 |
| 3. | ப்றொண்ற் எண்ட் லோடர் | 1 | 12 | ஷை | 1,44,180 40 |
| 4. | மோட்டார் கிறேடர் | 1 | 14 | வோக்கர்ஸ் அண்ட் கம்பனி வரையறுக்கப்பட்டது | 1,34,505 70 |
| 5. | காற்றமுக்கியும் துளை சாதனமும் | 1 | 17 | புறுடன்பர்க் கம்பனி வரையறுக்கப்பட்டது | 1,10,570 70 |
| 6. | கொன்கிறீற்று கலப்புப் பொறி | 1 | 16 | யுனயிட்றட் ட்றெக்ரர்ஸ் அன்ட் எக்விப்மன்ற் வரையறுக்கப்பட்டது | 9,151 70 |
| 7. | செமி ட்றெயிலர் ப்றைம் மூவருடன் | — | 12 | வோக்கர் சன்ஸ் அண்ட் கம்பனி வரையறுக்கப்பட்டது | 1,51,011 36 |
| 8. | பவர் ஸோ | — | 5 | யுனயிற்றட் ட்றெக்ரர்ஸ் அண்ட் எக்விப்மன்ற் வரையறுக்கப்பட்டது | 1,814 75 |

எல். ஒ. டி. எஸ். குணசேகர,
நீர்ப்பாசன அதிபருக்காக.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
கொழும்பு 7. 1969 சனவரி 12 ந திகதி.

1-838—24.1.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,838

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## சிறைச்சாலைத் திணைக்களம்

### பெரியதுறை சிறைச்சாலைக் கமம்

### மட்டக்களப்பு

மட்டக்களப்பு பெரியதுறை கமத்தில் 1969-2-14 காலை 10.30 மணிக்கு கீழ்வரும் கோழிகள் ஏலத்தில் விற்கப்படும்.

(அ) பெட்டைக் கோழிகள் 1 வருடம் 7 மாதம் வயதுடையவை—56

(ஆ) சேவல் கோழிகள் வயது 6 மாதம்—43

2. விலை கேட்பவர்கள் விடயங்கள் (அ) (ஆ) ஆகியவற்றிற்குத் தனித்தனியாக விலை கேட்க வேண்டும். கூடுதலாக விலை கேட்டுப் பெற்றவர் தலத்திலேயே பணம் கொடுத்து, பறவைகளை 12 மணி நேரத்தில், அப்புறப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

3. பறவைகளைப் பார்க்க விரும்புவோர் சிறைச்சாலை அத்தியட்சகருடன் கலந்தாலோசித்துச் செய்து கொள்ளலாம்.

4. எல்லா கேள்விகளையோ அல்லது கேட்கப்பட்ட ஒரு பகுதிக் கேள்விகளையோ நிராகரிப்பதற்கு கீழ் ஒப்பமிட்டவரின் உரித்தாகும்.

ஏ. எல். நாகரத்தினம்,
உதவி சிறைச்சாலை அத்தியட்சகர்.

மட்டக்களப்பு 69.1.15

1-886—24.1.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,838

---

# ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும்

## வவுனியா மாவட்ட கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை

**1.3.69 தொடக்கம் 30.9.69 வரை**

இதில் காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் சொல்லப்பட்ட வவுனியா மாவட்ட கள்ளுத் தவறணைகளில் 1.3.69 தொடக்கம் 30.9.69 வரைக்குமான கால எல்லை வரை சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதன் பொருட்டு சிறப்புரிமை வழங்குவதற்காக நடைமுறையில் இருந்துவரும் பொது விதிகளுக்கமையவும் 13.9.68 ம் தேதி பிரசுரிக்கப்பட்ட 14,819ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் காணப்படும் கள்ளுத் தவறணை குத்தகை விதிகளுக்கமையவும் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கேள்விப்பத்திரங்கள் "வவுனியா மாவட்ட கள்ளுக் குத்தகை 1968/69" என்று குறிப்பிட்டு பெப்பிரவரி மாதம் 8 ம் திகதி காலை அட்டவணையில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

3. ஒவ்வொரு தவறணைக்கும் தனித்தனிக் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும். எவரும் எந்த ஒரு தவறணைக்காவது ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விப்பத்திரங்களை அனுப்புவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். ஐந்து பேருக்கதிகமானவர்கள் கூட்டாகச் சேர்ந்து எந்த ஒரு தவறணைக்கும் கேள்விப்பத்திரம் அனுப்பமுடியாது.

4. கேள்விக்காரர்.—

(அ) நேர்முகத்தில் சமுகம்தராவிட்டால்,

(ஆ) எந்தப்பகுதியில் அவருடைய காணி இருக்கிறதோ அந்தப்பகுதி காரியாதிகாரியிடம் பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்துடன் கேள்விப்பத்திரம் அணைக்காவிடில்,

(இ) பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்தில் சொல்லப்பட்ட காணியின் பெறுமதி கேள்விப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட தொகையில் 25% குறைந்தால் அவரது கேள்விப்பத்திரம் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

(ஒன்றுக்கு மேற்பட்ட தவறணைக்குக் கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கும் கேள்விக்காரர் அதேவேளையில் அதே ஆண்டுக்குரிய வேறு தவறணைக்கு கேள்விப்பத்திரத்துடன் பெறுமதி அத்தாட்சிப்பத்திரத்தின் மூலப்பிரதியை அணைத்திருந்தால் அப்பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றை இணைக்கலாம்). அத்தகைய ஒவ்வொன்றிலும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பெறுமதிப்பத்திரப் பிரதி, மூலப்பிரதி இணைக்கப்பட்ட தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் கொண்ட குறிப்பை உள்ளடக்கியிருக்க வேண்டும்).

5. கேள்விப்பத்திரங்களை பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கலாம். அல்லது வவுனியா கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் போடலாம். ஆனால் கேள்விப்பத்திரம் எந்தத் தவறணைக்குத் தாக்கல் செய்யப்படுகின்றதோ அந்தத் தவறணையின் பெயரும் இலக்கமும் என்வலப்பின் இடது பக்க மூலையில் பொறிக்கப்பட்டு. என்வலப்பு சீல் பண்ணப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தனித்தனி என்வலப்பில் வைத்து மேற்காட்டிய குறிப்புகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

6. தவறணை விற்பனை நிபந்தனைக்கு அமைவாக ஒவ்வொரு விண்ணப்பகாரரும் ரூபா 1,000/– கட்டுப்பணமாகக் கட்டியதற்கு அத்தாட்சியாக கச்சேரிப்பற்றுச் சீட்டு இணைக்கப்படவேண்டும். கட்டுப்பணங்கள் வவுனியா அரசாங்க அதிபரின் பெயரில் கட்டல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்பட்டவுடன் விற்பனை நிபந்தனைகளுக்குக் கையொப்பமிடத் தவறினுல் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

7. எந்த ஒரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ வவுனியா அரசாங்க அதிபருக்குமாத்திரம் உரிமையுண்டு.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர், விற்பனை நிபந்தனையிலும், ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடவும், அரசாங்க அதிபரால் குறிக்கப்பட்ட பிணைப்பணத்தை செலுத்தவும் தேவையான முத்திரைகளைக் கொடுக்கவும் தயாராயிருத்தல் வேண்டும்.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர், குத்தகைக்காரர் என்று அறிவிக்கப்பட்ட மாத்திரத்தில், தான் எந்த இடத்தைத் தவறணையாகத் தெரிவு செய்கிறுர் என்பதை வவுனியா அரசாங்க அதிபருக்கு அறிவித்து அவரிடமிருந்து அதற்கான அனுமதியையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

10. மேற்கொண்டு விபரங்கள் அறிய வேண்டுமாயின் வவுனியா கச்சேரிக்கு மனுப்பண்ணிப் பெற்றுக்கொள்ளலாம்.

### மேற்கூறப்பட்ட அட்டவணை

**வவுனியா மாவட்ட கள்ளுத் தவறணைகள்**
**(1.3.69—30.9.69)**

| இலக்கமும் இடமும் | தவறணை உள்ளூர்ப்பகுதி | கேள்வி ஏற்கும் நேரமும் திகதியும் |
|---|---|---|
| 2. வலையன்மடம் .. | வலையன்மடம் கிராம எல்லைக்குள் | 8.2.1969 காலை 10 மணி |
| 6. அளம்பில் .. | அளம்பில் கிராம எல்லைக்குள் | 8.2.1969 காலை 10.15 மணி |

பி. சி. பெரேரா,
அரசாங்க அதிபர்,
வவுனியா மாவட்டம்.

கச்சேரி, வவுனியா,
15.1.69.

1–982—24.1.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,838

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைத்த அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்**

**அட்டவணை—1969**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **ஜனவரி** | 3.1.69 | வெள்ளி | 24.12.68 | செவ்வாய் | பி. ப. 3.30 |
| | 9.1.69 | வியாழன் | 3. 1.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 16.1.69 | வியாழன் | 9. 1.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 24.1.69 | வெள்ளி | 16. 1.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 31.1.69 | வெள்ளி | 24. 1.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| **பெப்புருவரி** | 7.2.69 | வெள்ளி | 31. 1.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 14.2.69 | வெள்ளி | 7. 2.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 21.2.69 | வெள்ளி | 14. 2.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 27.2.69 | வியாழன் | 20. 2.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| **மாச்சு** | 7.3.69 | வெள்ளி | 27. 2.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 14.3.69 | வெள்ளி | 7. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 21.3.69 | வெள்ளி | 14. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 28.3.69 | வெள்ளி | 21. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| **ஏப்பிறல்** | 3.4.69 | வியாழன் | 27. 3.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 11.4.69 | வெள்ளி | 31. 3.69 | திங்கள் | பி. ப. 3.30 |
| | 18.4.69 | வெள்ளி | 8. 4.69 | செவ்வாய் | ந. ப. 12.00 |
| | 25.4.69 | வெள்ளி | 18. 4.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 30.4.69 | புதன் | 23. 4.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| **மே** | 9.5.69 | வெள்ளி | 30. 4.69 | புதன் | பி. ப. 3.30 |
| | 15.5.69 | வியாழன் | 9. 5.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 22.5.69 | வியாழன் | 15. 5.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 30.5.69 | வெள்ளி | 22. 5.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| **யூன்** | 6.6.69 | வெள்ளி | 30. 5.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 13.6.69 | வெள்ளி | 6. 6.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 20.6.69 | வெள்ளி | 13. 6.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 27.6.69 | வெள்ளி | 20. 6.69 | வெள்ளி | பி. ப. 3.30 |

அரசாங்க அச்சகம், கொழும்பு,
1968 ம் ஆண்டு டிசம்பர் மீ 20 ந் வ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
பதில் அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது